ISSN 1391-9504

மாநகர சபை, யாழ்ப்பாணம்

# விஜய்

Vijey விஜய்

08.09.2010 - மலர் 07, இதழ் 27




விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாதையை மூடுவதற்கு வழங்கப்பட்ட ஆணை

ஒல்லாந்த ஆள்பதி குழப்பமடைந்தார். மன்னனிடம் மன்னிப்புக் கோரினார். அந்தத் தூதுவரை உடனடியாகத் திருப்பி அழைத்தார். நாட்டிலிருந்தும் வெளியேற்றினார். மன்னனும் அத்தூதருக்கு மன்னிப்பு வழங்கினான். எனினும், பழிவாங்கும் நோக்குடன் 'கிரேவட்' மூடப்படவேண்டும் என அரச சபை தீர்மானித்தது. 'கிரேவட்' என்பது நாட்டின் எல்லைக்கருகில் அமைக்கப்பட்டுள்ள (பாதை தடை) தடுப்பு வேலி ஆகும்.

ஒல்லாந்தப் பிரதேசங்களில் இருந்து கண்டி இராச்சியத்திற்கு செல்லும் சந்திகளில் (பாதை தடைகள்) தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருக்கும். அவை மூடப்பட்டதால் ஒல்லாந்தரின் பிரதேசங்களில் உள்ள நாட்டு மக்களுக்கு வர்த்தகப் பொருட்களைக் கொண்டு செல்வதில் தடைகள் ஏற்பட்டது. எனினும், தூதுவர்களின் பயணங்களுக்கு அவை பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அவர்கள் கேட்கும் பொழுது 'பாதைத் தடை' திறக்கப்பட்டது. துறைமுகங்கள் திறக்கப்பட்டதும் பாதைத் தடைகளைத் திறக்க வேண்டுமென்பதே மன்னனின் கருத்தாக இருந்தது. மன்னன் மீண்டும் துறைமுகங்களைத் திறக்கும்படி ஒல்லாந்த ஆள்பதியிடம் கேட்டார். எனினும், அக்கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. மன்னன் பாதைத் தடைகளை திறப்பதற்கு கட்டளையிட்டார்.

அந்நடவடிக்கை குறித்து ஒல்லாந்தர்கள் பெரிதுபடுத்தவில்லை. பத்தேவியாவிலிருந்து கிடைத்த ஆணையை மாற்ற முடியாதிருந்தமையே இதற்கு காரணமாகும். அங்கிருந்து கிடைத்த கட்டளையானது துறைமுகங்களை நிரந்தரமாகவே மூடிவிட வேண்டும் என்பதாகும்.

இதேவேளை, கற்பிட்டிக்கு வடக்கே கடற்கரைப் பிரதேசமொன்று மன்னனுக்கு சொந்தமாக இருந்தது. அவ்விடத்திற்கு புடவை வகைகளைக் கொண்டுவரும்படி அரச சேவையாளர்கள் இந்திய வர்த்தகர்களுக்கு கூறினர். அவ்வேளை, மன்னனுக்குரிய பிரதேசங்களில் வர்த்தக சங்கத்தின் கடிதப் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டிருந்தது. ஒல்லாந்த வர்த்தக சங்கமும் கல்பிட்டி மற்றும் அரிப்பு ஆகிய இரு இடங்களிலும் தமது படைகளைப் பலப்படுத்தியது. வர்த்தகக் கப்பல்களுக்கு இடையூறு விளைவிப்பதற்காக கரையோரப் பிரதேசங்களில் 'சுளுப்' போன்றவை பயணிப்பதற்கும் கட்டளை இடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உ/தரப் பரீட்சை விதிமுறைகளை மீறிய 10 மேற்பார்வையாளர்கள் வேலை நீக்கம்

நடைபெற்று முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையின்போது பரீட்சை சட்ட விதிமுறைகளை மீறியதாகக் கருதப்படுகின்ற மேற்பார்வையாளர்கள் பத்துப் பேர் பரீட்சை வேலைகளிலிருந்து விலக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் பரீட்சை வினாத்தாள்களை மாற்றி வழங்கியமை, பரீட்சை நிலையங்களில் மாணவர்களுக்கு உதவி செய்தமை மற்றும் பல்வேறு தவறுகள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரணைகள் நடத்தப்பட்டதன் பின்னர், குற்றவாளிகளாக இனங்காணப்படுபவர்களுக்கு இனிவரும் காலங்களில் பரீட்சை வேலைகளில் ஈடுபட முடியாதவாறு முற்றாகத் தடை விதிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வட மாகாண ஆசிரியர்கள் 367 பேரின் இடமாற்றம் நிறுத்தப்பட்டுள்ளது

வட மாகாண ஆசிரியர்கள் 367 பேரின் ஆசிரிய இடமாற்றங்களை உடன் நிறுத்துமாறு வட மாகாண ஆளுநர் அம்மாகாண கல்விச் செயலாளருக்குப் பணித்துள்ளார்.

குறித்த ஆசிரிய இடமாற்றங்கள் முறையற்றதாகவும் சட்டரீதியற்ற முறையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆசிரியர்களாலும் ஆசிரிய சங்கத்தினாலும் ஆளுநருக்கு முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை ஆராய்ந்ததை அடுத்தே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் பணியாற்றிய மேற்படி ஆசிரியர்களை கிளிநொச்சி மற்றும் மடுப் பிரதேசங்களுக்கு இடமாற்றுவதற்கு வட மாகாணக் கல்விச் செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார். எனினும், முறையான ஆசிரிய இடமாற்ற சபை ஒன்றினூடாக மட்டுமே மாகாணத்தில் ஆசிரிய இடமாற்றங்களை மேற்கொள்ளுமாறு ஆளுநரால் மாகாணக் கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கு ஜனவரி முதல் இடமாற்றம்



நாடளாவிய ரீதியிலான தேசிய பாடசாலைகளில் நீண்ட காலமாகக் கடமையாற்றி வருகின்ற ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான தேசிய இடமாற்றக் கொள்கையின் அடிப்படையில் ஜனவரி மாதம் முதல் இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதன்படி, தேசிய பாடசாலையொன்றில் ஆகக் குறைந்தது 8 வருடங்கள் தொடர் சேவைக்காலத்திலிருக்கும் அதிபர், ஆசிரியர்களுக்குப் புதிய கல்வி ஆண்டில் கட்டாய இடமாற்றத்தினை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், தேசிய இடமாற்றக் கொள்கைக்கமைய, மாகாண மட்டத்திலும் இடமாற்றங்களை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியிலான தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் தகவல்களைத் திரட்டும் பணிகள் தற்போதளவில் தேசிய பாடசாலைக் கிளையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்காக, மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் உதவியும் பெற்றுக்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பல்கலைக்கழகங்களுக்கு இந்தியாவால் வாகனங்கள் வழங்கப்படவுள்ளன



இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் பாவனைக்காக 50 பஸ்களையும், 50 ஜீப்களையும் வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணங்கியுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் மேற்படி வாகனங்கள் கிடைக்கப்பெறும் எனவும், பின்னர் அவை பல்கலைக்கழகங்களிடையே விநியோகிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



Vijey විජය விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## புதிய விஞ்ஞான ரீதியான நிர்மாணக் கண்காட்சி

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின்கீழ் இயங்கும் தேசிய சிறுவர் சபை அங்கத்தவர்களின் புதிய விஞ்ஞான ரீதியான நிர்மாணங்களுக்கான கண்காட்சி ஒன்றை நடாத்துவதற்கு அத்திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.



இந்தக் கண்காட்சியானது பிரதேச சிறுவர் சபை மற்றும் மாவட்ட சிறுவர் சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது. மாவட்ட மட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் சிறந்த படைப்புகளை ஒக்டோபர் மாதமளவில் கொழும்பில் கண்காட்சியொன்றை நடாத்தி, தேசிய மட்டத்திலான கவனத்தைப் பெற்றுக்கொடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், சிறுவர்களின் படைப்புகள் குறித்து சமூகத்தில் பல்வேறு துறைகளின் கவனத்தைப் பெறச் செய்வதே இக்கண்காட்சியை நடாத்துவதன் பிரதான நோக்கமாகும் என நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## 'சேகரிப்போம் சுவீகரிப்போம்' பரிசுப் போட்டி

* பாடசாலை பேக்ஸ்,
* டீ-ஷேர்ட்ஸ்,
* டீ-மக்ஸ்,
* கெப்ஸ்களை

வெல்லுங்கள்!

இலங்கை வரைபடமானது பன்னிரெண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு வாரத்திலும் பிரசுரிக்கப்படும். அவ்வாறு வாராவாரம் பிரசுரிக்கப்படுகின்ற பகுதிகளை தொடர்ச்சியாக சேகரித்து வாருங்கள். பன்னிரெண்டு பகுதிகளையும் சேகரித்த பின்னர், இலங்கையின் வரைபடம் முழுமைப்படும் வகையில் அவற்றை ஒழுங்கமைத்து-தபால் அட்டையில் ஒட்டி-எமக்குத் தபாலிட்டு பரிசுகளை சுவீகரித்துக்கொள்ளுங்கள். முழுமைப்படுத்தப்பட்ட வரைபடத்தை தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 011-2479653 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.



### வெற்றி பெறுவோருக்கான பரிசுகள்

10 பேருக்கு - பாடசாலை பேக்ஸ் (School bags)
15 பேருக்கு - டீ-ஷேர்ட்ஸ் (T-Shirts)
100 பேருக்கு - கெப்ஸ் (Caps)
100 பேருக்கு - டீ-மக்ஸ் (Tea mugs)

### விதிமுறைகள்

* ஒருவர் எத்தனை தபாலட்டைகளையும் அனுப்பலாம்.
* முழுமைப்படுத்திய வரைபடத்தை தபாலட்டையில் மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
* தபாலுறையில் அனுப்புபவை நிராகரிக்கப்படும்.
* நிழற்பிரதிகள் (Photo copy) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்த வார பாகம்
இல: 9




### தவறவிட்டவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு...

இலங்கை வரைபடத்தின் பாகம் 1-5 வரையான பகுதிகளைத் தவறவிட்டவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு.... பொறுத்திருங்கள். விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்டர்நெட்டுக்கு வயது 41

**லெனாட் கிளெய்ன் ரொக் என்பவர் அமெரிக்காவில் உள்ள கணினி விஞ்ஞானியாவார். 1969 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள அவரது கணினி ஆய்வுகூடத்தில் பலரும் ஒன்று கூடினர். முக்கியமான ஒரு தகவலை அறிந்து கொள்வதற்காகவே அவர்கள் அங்கு திரண்டனர்**





பெரிய திரையுடைய இரண்டு கணினிகளில் ஒன்றில் இருந்து ஒன்றுக்கு தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் காட்சியை அங்கு திரண்டவர்கள் பார்த்தனர். ஆனால், ஒரு கணினி மற்றொன்றுடன் மின்சாரக் கம்பி மூலம் இணைக்கப்பட்டிருந்தது.

இந்த தகவல் பரிமாறும் முயற்சியில் கிளெய்னும் அவரது நண்பர்களும் வெற்றி கண்டனர். பின்னர் இந்த முயற்சி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு அத்திணைக்களத்தின் உதவியுடன், தகவல் பரிமாறும் வலைப்பின்னல் உருவாக்கப்பட்டது. அந்த முறையானது ஆர்பனெட் என்று (Arpanet) அழைக்கப்பட்டது. இந்த முறை ஆரம்பத்தில் பல்கலைக்கழக ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது.

இந்த ஆர்பனெட் ஊடாக வளர்ச்சி கண்டதுதான் இன்று உலகம் முழுவதும் உள்ள இன்டர்நெட் (சர்வதேச வலைப் பின்னல்) முறையாகும். இந்த இன்டர்நெட் பிறந்து 41 ஆவது வருட பூர்த்தி தினம் செப்டெம்பர் 02 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இன்டர்நெட் வளர்ச்சியுடன், சர்வதேச தகவல் பரிமாற்ற முறையிலும் தகவல் தொழில்நுட்பத்திலும் புதிய பரிணாமம் ஏற்பட்டது. புதிய தகவல் பரிமாற்ற கலாசாரமும் உருவாகியிருக்கின்றது.

பல்வேறுவிதமான வளர்ச்சிப்படிகளின்பின் இடத்திற்கிடம் எடுத்துச்செல்லும் 'லெப்டொப்' கணினி மூலம் அலுவல்களை மேற்கொள்ளும் அளவுக்கு இன்டர்நெட் பணிகள் தற்போது இலகுவாகிவிட்டன. இதனை நாம் வீட்டுத்துறை தொடர்பாடல் (Indoor Communication) என்றழைக்கின்றோம். வீட்டுக்குள்ளிருந்தே சகல அலுவல்களையும் மேற்கொள்ளும் நிலை வரும் சாத்தியங்கள் இருந்தாலும் இன்னும் அந்த நிலை முழுமையாக உருவாகவில்லை.



இந்த வீட்டுத்துறை தொடர்பாடலில் மனிதனுக்கு உதவுவது இன்டர்நெட் (Internet) ஆகும். இதற்கு உலகை இணைக்கும் தொழில்நுட்பமான WWW அல்லது World Wide Web தொழில்நுட்பம் (உலகம் பரவிய) கை கொடுக்கின்றது.

## ஆபர்நெட்டின் பரவல்

41 வருடங்களுக்கு முன்னர் அறிமுகமான 'ஆபர்நெட்' முதலில் அமெரிக்காவில் மட்டுமே காணப்பட்டது. அமெரிக்காவில் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மையங்கள் மட்டுமல்லாது பாதுகாப்புத் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றுடன் தகவல் பரிமாற்ற வலைப் பின்னலாக இந்த 'ஆபர்நெட்' இணைப்பு செய்யப்பட்டது.

காலம் செல்லச்செல்ல இந்த முறை விரிவுபடுத்தப்பட்டு வர்த்தக-வாணிப நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. தனியார் கணினி தொழில்நுட்ப மையங்களின் வளர்ச்சியுடன் உலகம் முழுவதற்குமான தகவல் பரிமாற்ற ஊடகமாக ஆபர்நெட்டைப் பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கை வலுவடைந்தது.

இதில் பல்வேறு கணினி தொழில்நுட்ப நிறுவனங்களும் துறைசார் நிபுணர்களும் இணைந்து 'ஆபர்நெட்' தொழில்நுட்பத்தை விரிவுபடுத்த முயன்றனர். புதிய ஆராய்ச்சிகள் செய்து தொழில்நுட்பத்தை விருத்தி செய்ததன் பயனாக இன்றைய இன்டர்நெட் வளர்ச்சியடைந்தது.

இதனால், இந்த தகவல் பரிமாற்ற முறையானது இலகு பரிமாற்ற வழிமுறையாக மாறியது. இதன் இன்றைய உயர் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது ஆபர்நெட் தகவல் பரிமாற்ற முன்னோடி முறையாகும். நாம் இன்று அனுபவிக்கும் இன்டர்நெட் வளர்ச்சி வரை இந்த ஆபர்நெட் முறை வளர்ச்சியடைய அதிகம் பங்களிப்பு செய்த நாடாக அமெரிக்கா இருக்கின்றது.

இன்டர்நெட்டின் ஆரம்பத்திலும் இந்த ஆபர்நெட் தொழில்நுட்பம் பல கணினிகளை ஒன்றுடன் ஒன்று கம்பிகள் மூலம் இணைப்பதாகவே இருந்தது. அந்த வழிமுறை ஊடாகவே ஒரு கணினியில் இருந்து மற்றொன்றுக்கு தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

ஒரு முனையில் இருப்பவர் மற்ற முனையில் உள்ளவரோடு, தொடர்புகொள்ளும் முறையாக இது வளர்ச்சி கண்டது. ஆனாலும், இன்றைய வேகம் (Speed) அன்று காணப்படவில்லை. மெதுவாகவே அசைவுகள் நடைபெற்றன. இதற்கு காரணம் அன்று ஆரம்பகட்டத்தில் இன்றிருக்கின்ற அளவுக்கான தொழில்நுட்ப வளர்ச்சி காணப்படாததேயாகும். இதன் விளைவு ஒரு கணினி இயங்காமல் போய்விட்டால் ஏனைய அனைத்துக் கணினிகளும் இயங்காமல் செயலிழக்கும் நிலையே இருந்தது.

## தொழில்நுட்பப் புரட்சி

மனிதன் 21 ஆம் நூற்றாண்டிற்குள் பிரவேசிக்கும்போது அதற்கு இலத்திரனியல் ஊடகத்தையும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. கணினி தொழில்நுட்பம் இதனை இலகுபடுத்தியது. இதன் காரணமாக, மனிதனின் தகவல் அறியும் ஆர்வமும் தேவையும் நிறைவடையும் கட்டம் உருவாகியது. அதில் திருப்திப்படக்கூடிய நிலை ஏற்பட்டது.

ஊடகங்கள் துரித வளர்ச்சிக்குள் பிரவேசித்தன. அதுவரையில் நாட்டில் ஓரிடத்தில் அச்சிடப்பட்ட பத்திரிகையை ஒரே நாட்டில் பல்வேறு பிராந்தியங்களிலும் ஒரே நேரத்தில் அச்சிடும் நிலை ஏற்பட்டது. இதனை நாம் பிராந்திய பதிப்புக்கள் என்றழைக்கின்றோம். பிரதான இடத்தில் இருந்து ஏனைய பிராந்தியங்களுக்கு ஒரே தகவல் இணையத்தளம் ஊடாக பரிமாறப்பட்டமை இதில் ஏற்பட்ட வளர்ச்சியாகும். இதில் இன்டர்நெட் வசதி முக்கிய பங்காற்றுகின்றது.

தொலைக்காட்சி மற்றும் வானொலிச் சேவைகளும் இதன் மூலம் மேலும் வளர்ச்சி கண்டன.

இணைய வானொலி, தொலைக்காட்சி சேவைகள் வளர்ச்சியடைந்ததால் உலகில் எந்த மூலையில் இருப்பவருக்கும் அதனோடு இணைந்து தெளிவாகப் பார்க்கவும் கேட்கவும் வாய்ப்பாக அமைந்தது.

அத்துடன், கடிதப் பரிமாற்ற சேவையும் இலகுவாகியது. இதனால், பிறநாடுகளில் உள்ளவர்கள் ஈமெயில் ஊடாக சில விநாடிகளில் கடிதப் பரிமாற்றம் மேற்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

காலப்போக்கில் இன்டர்நெட் கெமராவைப் பயன்படுத்தி உலகில் எந்த நாட்டில் இருப்பவருடனும் நேருக்கு நேர் முகம் பார்த்து உரையாடும் வாய்ப்பும் வளர்ச்சியடைந்தது. பல நாடுகளில் இருப்பவர்களை ஒரே மேசையில் இருந்து மாநாடு நடத்துவது போன்று சைபர் கெமரா (Cyber Camera) வில் இணைத்து மாநாடுகளைக்கூட நடத்தும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. இத்தனைக்கும் வசதியாக அமைந்தது இன்டர்நெட்டின் வருகையாகும்.

## தகவல் பரிமாற்ற சிறப்புப் பாதை

இவ்வாறாக இலகு, விரைவு தகவல் பரிமாற்ற தொழில்நுட்பம் ஏற்படக் காரணம் வில்லியம் ஹிப்சன் என்பவராவார். அவர் எழுதிய கட்டுரையின் ஊடாகவே,கணினியில் தகவல்களை சேகரித்து வைத்தல், இடத்திற்கிடம் பரிமாறிக் கொள்ளல் என்ற முறை அறிமுகமாகியது.

1989 ஆம் ஆண்டின் பின்னர் இது நிஜமாகும் வகையில் சர்வதேச வலைப் பின்னல் ஊடாக தகவல் பரிமாற்ற முறை புரட்சிகர மாற்றத்தையும் வளர்ச்சியையும் அடைந்தது. இன்று நாம் அனைவரும் எவ்வகையான தகவல்களை பெற்றுக் கொள்ள வேண்டுமானாலும் உடனடியாக இன்டர்நெட்டை நாடும் அளவுக்கு தகவல் பரிமாற்ற தொழில்நுட்பம் எம்மை பூகோள கிராமம் (Global Village) என்ற நிலைக்கு இணைத்திருக்கின்றது.

உலகில் அரசாங்க மற்றும் கோடிக்கணக்கான தனியார் நிறுவனங்கள் இதனோடு இணைந்திருப்பது மட்டுமல்லாது, இதனால் மானிட சமுதாயம் அளவு கடந்த பயனை அடைந்து வருகின்றது. (ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புப் பெருநாள்:—

## நோன்பாளிகளுக்கான அல்லாஹ்வின் சிறந்த பரிசு



'அல்லாஹு அக்பர்.... அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்...
லாஇலாஹ இல்லல்லாஹு அல்லாஹு அக்பர்...
அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்த்!'

இன்னும் ஓரிரு நாட்களில் பள்ளிவாசல்களில் ஒலிக்க இருக்கின்ற, உலகவாழ் முஸ்லிம்களால் மொழியப்பட இருக்கின்ற பெருநாள் தக்பீர்தான் இது.

### நோன்புப் பெருநாள்

ரமழான் மாதம் முழுவதும் அல்லாஹ்வுக்காக நோன்பிருந்து, ஷவ்வால் மாதம் தலைப்பிறை பார்த்த பின்னர் கொண்டாடப்படுவதுதான் 'ஈதுல் ஃபித்ர்' நோன்புப் பெருநாள் ஆகும். ரமழான் முழுவதும் நன்மையான காரியங்களில் நாட்டம் கொண்டு, அல்லாஹ்வுக்காக நோன்பிருந்த அடியார்களுக்காக அவன் அளிக்கும் சிறந்த பரிசாகவே இந்தப் பெருநாள் அமைந்துள்ளது. இது முஸ்லிம்களின் வாழ்நாட்களில் அவர்கள் பெற்றுக்கொள்கின்ற சிறந்த திருநாள் ஆகும். இதனை பின்வரும் ஹதீஸ் விளக்குகின்றது.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனா வந்தபோது, மதீனாவாசிகள் இரு நாட்களைத் திருவிழாவாகக் கொண்டாடி மகிழ்வதை அவதானித்தார்கள். இதைக்கண்ட நபிகளார் அதுபற்றி விசாரித்தபோது, ''நாயகமே! இஸ்லாம் பரவுவதற்கு முன்பிருந்தே இவ்விரு தினங்களையும் வருடாந்த விளையாட்டு நாட்களாகப் பிரகடனப்படுத்தி நாம் கொண்டாடி வருகின்றோம்'' என்றனர். இதைக் கேட்ட நபி முஹம்மத் (ஸல்) அவர்கள், ''இவ்விரண்டு நாட்களுக்குப் பதிலாக அல்லாஹ் அதைவிடச் சிறந்த இரு தினங்களை உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றான். அவற்றில் ஒன்று ஈகைப் பெருநாள் (ஈதுல் ஃபித்ர்); மற்றொன்று தியாகத் திருநாள் (ஈதுல் அழ்ஹா)''. (ஆதாரம் : அபூ தாவூத், நஸயீ)



### நற்கூலியைப் பெறுவதற்கான மாதம்

'ஈத்' எனும் அரபுப் பதத்திற்கு 'திரும்பத் திரும்ப வருதல்' என்பது பொருளாகும். பெருநாட்கள் ஆண்டுதோறும் திரும்பத் திரும்ப வருவதால்தான் இப்பெயர் பெற்றது.

மனிதர்களை நேர்வழிப்படுத்த வந்த அல்குர்ஆன் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கிய மாதம்தான் ரமழான். எனவே, இம்மாதத்தின் எல்லா நாட்களையும் அல்குர்ஆனை அருளிய அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காக முஸ்லிம்கள் ஆக்கிக் கொள்கின்றனர். அல்லாஹ்வின் நற்கூலியைப் பெறுவதற்காக, அவனது கட்டளைப்படி நோன்பிருந்து அதிகமதிகம் நல்ல காரியங்களைச் செய்வதில் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட மாதம்தான் ரமழான். ரமழானில் ஒவ்வொரு செயலின் போதும் அது அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை வேண்டியதாக அமைய வேண்டும் என்ற உணர்வே நம்மிடம் மேலோங்கி இருக்கின்றது.

எனவே, ஒரு மாதகாலம் சிறந்த ஆன்மீகப் பயிற்சி பெற்ற நாம், ரமழான் விடைபெற்றவுடன் அந்த நற்செயல்கள் எல்லாம் நம்மை விட்டுப் பிரிந்து செல்லும் அளவுக்கு நடந்துகொள்ளலாகாது. ஏனெனில், நாம் நோற்ற நோன்புகளுக்கும் நன்மையான காரியங்களுக்கும் உரிய கூலியை அல்லாஹ் ரமழான் முடிந்த பிறகே வழங்குகின்றான்.

### ஸகாதுல் ஃபித்ர்

குடும்பத்தினர், உற்றார், உறவினர்களுடன் சந்தோஷமாக நோன்புப் பெருநாளைக் கொண்டாட இருக்கும் நாம், எம்மைப் போன்றே ஏழைகளும் பெருநாளை இன்பமாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக இஸ்லாம் கூறியுள்ள ஸகாதுல் ஃபித்ர் எனும் நோன்புப் பெருநாள் தர்மத்தை அவர்களுக்கு வழங்கிடுவோம். பெருநாள் தொழுகைக்கு முன்னதாக அதனை வழங்குவது கடமையாகும். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்காகவும் இரு கைகளின் கொள்ளளவில் நான்கு மடங்கு தர்மம் கொடுப்பதையே இது குறிக்கின்றது. கோதுமை, பேரீச்சம்பழம் உட்பட ஏழைகளுக்குப் பயன்படக்கூடிய விதத்தில் நாம் விரும்பும் பொருட்களை அவர்களுக்குக் கொடுக்கலாம். பெருநாள் தினத்தில் ஏழைகள் பட்டினி இருக்கக்கூடாது என்பதற்காகவும் நோன்பாளிகளிடமிருந்து வீணான தவறுகள் நேர்ந்திருப்பின், அவற்றிலிருந்து தூய்மை பெறுவதற்குமாகவே இது வழங்கப்படுகின்றது.

### பெருநாள் தினத்தில்....

பெருநாளன்று ஒவ்வொருவரும் குளித்துப் புத்தாடை அணிவது சுன்னத்தாகும். ஆண்கள் நறுமணம் பூசிக்கொள்வது நபி வழியாகும். நோன்புப் பெருநாள் தொழுகைக்குச் செல்லும்போது உணவருந்திவிட்டுச் செல்வது விரும்பத்தக்கது. 'நபியவர்கள் உண்ணாமல் நோன்புப் பெருநாள் தொழுகைக்காகப் புறப்பட மாட்டார்கள்' (ஆதாரம்: திர்மிதி). அவ்வாறே மற்றொரு அறிவிப்பில், 'சில பேரீச்சம்பழங்களை ஒற்றைப் படையில் சாப்பிடாமல் நபி (ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாள் தொழுகைக்குப் புறப்படமாட்டார்கள்' என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஆதாரம் : புஹாரி)

அத்துடன், ஈத் பெருநாட்களில் அல்லாஹ்வைப் புகழ்ந்து தக்பீரை மொழிந்தவர்களாக தொழுகைக்காக வீட்டிலிருந்து புறப்படுவதும் நபி வழியாகும். மேலும், பெருநாள் தொழுகையை திடலில் கூட்டாக நிறைவேற்றுவது விரும்பத்தக்கது. திறந்தவெளியில் நிறைவேற்றப்படும்போது அனைவரையும் சந்திக்கக்கூடியதாகவும் பெருநாள் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது. பெரும்பாலும் நபியவர்கள் பெருநாள் தொழுகைகளை திறந்தவெளியில் கூட்டாக நிறைவேற்றுபவர்களாகவே இருந்துள்ளார்கள்.

பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின்னர், அவ்விடத்தைவிட்டு உடனே கலைந்துவிடாமல் பெருநாள் உரையை செவிமடுப்பதோடு, பிரார்த்தனைகளில் ஈடுபடுவது சிறந்தது. ஏனெனில், பெருநாளைக்கென்று ஒரு பரகத்தும் புனிதமும் இருப்பதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, அந்தப் பாக்கியத்தை நாம் இழந்து விடக்கூடாது. நமது பிரார்த்தனையில் எமது குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள் மற்றும் நம்மை விட்டுப் பிரிந்த உறவுகளுக்கான பிரார்த்தனைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஏனையவர்களுடன் ஸலாம் கூறி-கட்டித்தழுவி-வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வதனூடாக, சமூக ஒற்றுமை கட்டியெழுப்பப்படுகின்றது. அன்பு மேலோங்குகின்றது. மனக்கசப்புகள் நீங்கி விடுகின்றன. மனதளவில் தூய்மைப்படுத்தப்படுவோம். இந்த உணர்வுகள் நமது வாழ்நாட்களை புத்துணர்ச்சியுள்ளதாக மாற்றி விடுகின்றன.

எனவே, விடைபெறும் ரமழான் நமக்குப் போதிப்பவை ஏராளம். நேர்வழியின்பால் நாம் நடப்பதற்கும் வெற்றி பெறுவதற்கும் சிறந்த பயிற்சியை அது நமக்கு அளிக்கின்றது. ஆகவே, நேர்வழி சென்று அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமானவர்களாவோம்.

'அல்ஹம்துலில்லாஹ்' எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

அனைவருக்கும் எமது இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்.

-ஜீநு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரைகளில் பறவை

யாதேனும் ஒரு தலைப்புடன் வெளியிடப்படும் முத்திரை 'தலைப்புடைய வகை முத்திரை' எனப்படும். இவ்விதமான முத்திரை ஒருமுறை மாத்திரமே வெளியிடப்படும். இதனால், இவை அரிதானவையாகக் கருதப்படுகின்றது. தலைப்புடைய வகை முத்திரை வரிசையில் குருவிகளின் உருவங்களைக்கொண்டு இலங்கையில் வெளியிடப்பட்ட முத்திரைகளின் விபரம் வருமாறு;

## நாகணவாய் (Lesser Hill Myna)

முத்திரை வெளியிடப்பட்ட திகதி: 1966.02.05
அளவு: மி.மீற்றர் 29×24.5
பெறுமதி: 05 சதம்




வீட்டுத் தோட்டங்களில் பொதுவாகக் காணப்படும் இக் குருவி மைனாவைவிட தோற்றத்தில் சிறிது பெரியதாகும். தலைப்பகுதியில் மஞ்சள் நிறம் காணப்படும். ஆண் குருவியும் பெண் குருவியும் உடல் அமைப்பில் ஒரே விதமாகத் தோற்றமளிக்கும். சோடியாக அல்லது கூட்டாக மரஉச்சியில் வசிப்பதை இவை விரும்புகின்றன. பலவித இனிமையான ஓசையுடன் உரத்துக் குரல் எழுப்பும். பேசப் பழக்கக்கூடிய குருவியாக இருப்பதால் செல்லப் பிராணியாகவும் இது வளர்க்கப்படுகிறது. இலங்கையில் பல இடங்களிலும் காடுகள் மற்றும் வீட்டுத் தோட்டங்களிலும் இது காணப்படுகின்றது.

## மயில் (Peacock)

முத்திரை வெளியிடப்பட்ட திகதி: 1966.02.05
அளவு: மில்லிமீற்றர் 29×24.5
பெறுமதி: 15 சதம்




இது மிகவும் அழகான பறவையாகும். எனினும், பெண் பறவை, ஆண் பறவையைப் போன்று அழகாக இருப்பதில்லை. மயிலின் உடலில் 125 இற்கும் 150 இற்கும் இடைப்பட்ட இறகுகள் காணப்படும். மயில் சிறு கூட்டமாக வாழும் தன்மையுடையது. இரவில் உயரமான மரங்களின் உச்சியில் தங்கும். இலங்கையில் வறண்ட வலயத்திலும் அதனை அண்மித்த வலயங்களிலும் வாழ்கின்றன.

## காட்டுச்சேவல் (Ceylon Jungle Fowl)

முத்திரை வெளியிடப்பட்ட திகதி: 1966.02.05
அளவு: மி.மீற்றர் 29×24.5
பெறுமதி: 60 சதம்




இது இலங்கையின் தேசிய பறவையாகும். அவ்வாறே, இலங்கைக்கே உரிய சிறப்பான பறவையுமாகும். பெண் பறவை ஆண் பறவையைவிட உருவத்தில் சிறியது. அத்தோடு, இவை மறைந்து குழுவாக வாழும் தன்மையுடையது. அனேகமாக, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள காடுகளில் பரவலாகக் காணப்படுகிறது.

## பொற்குருவி (Black-headed Oriole)

முத்திரை வெளியிடப்பட்ட திகதி: 1966.02.05
அளவு: மி.மீற்றர் 29×24.5
பெறுமதி: 75 சதம்




இது இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வீட்டுத்தோட்டங்களிலும் காணக்கூடிய குருவியாகும். பெண் குருவி ஆண்குருவியைவிட, நிறத்தில் மங்கலாகத் தோற்றமளிக்கும். இக்குருவிகள் சோடியாக வசிக்கும். உயரமான மரங்களில் இருப்பதை மிக விரும்பும். உரத்த குரலில் பலவித ஓசைகளை எழுப்பும்

## செம்புக் குருவி (Ceylon Blue Magpie)

முத்திரை வெளியிடப்பட்ட திகதி: 1979.12.13
அளவு: 27.5×32.8
பெறுமதி: 10 சதம்




இது இலங்கைக்கே உரிய அழகிய குருவி. ஆண் குருவியும் பெண் குருவியும் உடலமைப்பில் ஒத்ததாகவே காணப்படும். இலங்கையில் காணப்படும் காகக் குடும்பத்தில் அழகான குருவியாக இது விளங்குகின்றது. இது சோடியாக அல்லது சிறு குழுவாக வாழும். உரத்த குரலில் இனிமையாக பல குரல்களில் ஓசை எழுப்பும். ஈர வலயத்தில் அமைந்துள்ள காடுகளிலும் மலைநாட்டிலுள்ள காடுகளிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இதனைக் காணலாம்.

## சிறுகிளி (Ceylon Hanging Parrot)

முத்திரை வெளியிடப்பட்ட திகதி: 1979.12.13
அளவு: மி.மீற்றர் 27.5×32.8
பெறுமதி: 15 சதம்




இதுவும் இலங்கைக்கே உரிய சிறப்பான பறவையாகும். கிளிக் குடும்பத்தைச் சேர்ந்த சிறு பறவை. பெண் பறவை, ஆண் பறவையைவிட நிறத்தில் சிறிது குறைந்தது. தனியாக, சோடியாக, சிறு குழுவாக இதனைக் காணலாம். மர உச்சியில் கிளைகளுக்கு இடையில் இருப்பதை இவை விரும்புகின்றன. இரவு நேரங்களில் தலைகீழாக இருக்கும்வண்ணம் மெல்லிய கிளையொன்றில் கால்களை வைத்து உறங்கும். ஈரலிப்பான காடுகளிலும் கிராமப் புறங்களில் உள்ள வீட்டுத் தோட்டங்களிலும் மலைநாட்டின் மலையடிவாரத்திலும் வறண்ட பிரதேசத்திலும் இவை காணப்படுகின்றன.

## அரங்கயா (Ceylon Whistling Thrush)

முத்திரை வெளியிடப்பட்ட திகதி: 1979.12.13
அளவு: மி.மீற்றர் 27.5×32.8
பெறுமதி: 75 சதம்




இது இலங்கைக்கே சிறப்பாக உரிய குருவியாகும். ஆண் குருவி கரிய நிறத்தையும் பெண்குருவி கபில நிறத்தையும் உடையன. சோடியாக வாழும். இனிமையான குரலில் ஓசை எழுப்பும். மலைகளிலும் மலையை அண்டிய நீர்த்தேக்கங்களுக்கு அருகிலும் வாழும். இது மறைந்து வாழும் தன்மையுடையது.

## காட்டுக்கோழி (Ceylon Spur fowl )

முத்திரை வெளியிடப்பட்ட திகதி: 1979.12.13
அளவு: மி.மீற்றர் 27.5×32.8
பெறுமதி ரூபா ஒன்று (1.00)





இலங்கைக்கே உரிய சிறப்பான குருவி இனம் இதுவாகும். காட்டுக்கோழியைவிட உருவத்தில் சற்றுச் சிறியது. இதற்கு காட்டுக்கோழியைப்போல் கொண்டை இல்லை. பெண் குருவி, ஆண் குருவியைவிட நிறத்தில் குறைந்தது. இக்குருவியின் கால்கள் இரண்டிலும் ஒவ்வொரு சோடி முள் உண்டு.இக்குருவி சோடியாக வாழும் தன்மையுடையதீ. இவை சோடியாக உரத்த குரலில் நாதமிடும். ஈரலிப்பான பிரதேசத்தில் உயர்ந்த மரங்களைக்கொண்ட காடுகளில் பெரும்பாலும் இவை வசிக்கும்.

## மரங்கொத்தி (Yellow-Fronted Bowbet)

முத்திரை வெளியிடப்பட்ட திகதி: 1979.12.13
அளவு: 27.5×32.8
பெறுமதி: ரூபா 5




இது இலங்கைக்கே உரிய சிறப்புக் குருவியாகும். ஆண் குருவியும், பெண் குருவியும் உருவத்தில் ஒரே அளவினதாகும். முட்டையிடும் காலங்களைத் தவிர, ஏனைய காலங்களில் தனியாக வாழும். ஈரலிப்பான வலயத்தில், உயரம் குறைந்த இடங்களில் அல்லது மலைநாட்டில் அதிக மரங்களைக்கொண்ட காடுகளில் பெரும்பாலும் காணப்படும். மத்திய மலைநாட்டின் அடிவாரத்துக்கு கிழக்கேயுள்ள பிரதேசங்களில் இக்குருவியின் சிறு குழுக்களைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களின் படங்கள்



## மஞ்சள் காது கொண்டைக்குருவி (Ceylon yellow eared bulbul)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1979.12.13
**அளவு:** 27.5×32.8
**பெறுமதி:** ரூபா 10




இது இலங்கைக்கே உரிய குருவியாகும். கண்ணுக்குப் பின்னால் பரந்துள்ள மஞ்சள் நிற இறக்கைகள் இக்குருவியின் உடலமைப்பின் சிறப்பம்சமாகும். ஆண் குருவியும் பெண் குருவியும் தோற்றத்தில் ஒரே விதமாகவே காணப்படும். சோடியாக அல்லது சிறு குழுவாக இவற்றைக் காணலாம். மலைநாட்டில் காடுகளிலும் வீட்டுத்தோட்டங்களிலும் இவற்றைக் காணக்கூடியதாக உள்ளது.

## மரப் புறா (Wood Pigeon)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1983.11.22
**அளவு:** 29×38.68
**பெறுமதி:** 25 சதம்




இதுவும் இலங்கைக்கே உரிய சிறப்பான குருவியாகும். உடலமைப்பில் புறாவை விட சற்றுப் பெரியதாகும். ஆண் குருவியும், பெண் குருவியும் தோற்றத்தில் ஒரே விதமாக இருக்கும். சோடியாக அல்லது சிறு குழுவாக வாழும் தன்மையுடையது. இலங்கையில் 3000 அடிக்கு மேற்பட்ட உயரமுடைய வனாந்தரங்களில் வசிக்கும். ஈர வலயத்தில் தாழ்வான வனாந்தரங்களிலும் இவற்றைக் காணலாம்.

## பூக்குருவி (Ceylon Hill white eye)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1983.11.22
**அளவு:** 29×38.68
**பெறுமதி:** 35 சதம்




உடலமைப்பில் வீட்டுக் குருவியைவிட சற்றுச் சிறியது. கண்களைச் சுற்றிவெள்ளை வட்டம் காணப்படும். பல குரல்களில் சத்தம் எழுப்பும். சிறு குழுக்களாக வசிக்கும். மலைக்காடுகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் காணலாம்.

## கருநீலக் குருவி (Darky blue flycatcher)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1983.11.22
**அளவு:** 29×38.68
**பெறுமதி:** ரூபா 2.00




இலங்கைக்கே சிறப்பாக உரிய குருவி. தனிமையாக அல்லது சோடியாகக் காணலாம். இக்குருவி தாழ்ந்த குரலில் மிக இனிமையாகக் குரலெழுப்பும். மலைநாட்டின் காடுகளிலும் மரங்கள் அதிகமாக உள்ள வீட்டுத் தோட்டங்களிலும் காணப்படும்.

## எடிகுகுவா குருவி (Green billed caucal)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1983.11.22
**அளவு:** 29×38.68
**பெறுமதி:** ரூபா 20.00




மூங்கில் பற்றைகள், ஏனைய பற்றைகள் மத்தியில் அலைந்து திரிவதை விரும்புகிறது. பெரும்பாலும் காணமுடியாத குருவியாகக் கருதப்படுகிறது. சோடியாக வாழ்கின்றன. பலவித தொனிகளில் குரல் எழுப்பும். ஈரவலய வனாந்தரங்களில் மட்டுமே வாழும். இது இலங்கைக்கே உரிய சிறப்பான குருவியினமாகும்.

## சாம்பல் கிளி (Layard's parakeet)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1987.05.18
**அளவு:** 24×38
**பெறுமதி:** 50 சதம்




இலங்கைக்கே சிறப்பாக உரிய பறவை. ஏனைய கிளிகளைவிட இதன் வால் சிறியது. இதன் சொண்டு சிவப்பு நிறமானது. பெண் கிளியின் சொண்டு கறுப்பு நிறமானது. சோடியாகவும் சிறு குழுவாகவும் வசிக்கும். மிகவும் வேகமாகப் பறக்கக்கூடியது. பறக்கும்போது சத்தமிடுவது இதன் வழக்கமாகும். மலைநாட்டிலும் ஈர சமவெளி வனாந்தரங்களிலும் வாழும்.

## பிலலிச்சா குருவி (Legge's flower pecker)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1987.05.18
**அளவு:** 24×38
**பெறுமதி:** ரூபா 1.00




ஆண் குருவியைவிடப் பெண் குருவிகள் நிறத்தில் குறைந்து காணப்படும். தனியாக அல்லது சோடியாக வாழும். ஈர வலயத்தில் தென்மேற்கு வனாந்தரத்தில் மாத்திரமே வசிக்கும். உயர்ந்த மரஉச்சியில் இருப்பதால் இதனை அதிகம் காணமுடியாது. இது இலங்கைக்கே உரிய பறவையாகும்.

## வங் குருவி (Ceylon rufous bubbler)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1987.05.18
**அளவு:** 24×38
**பெறுமதி:** ரூபா 10.00




இலங்கைக்கே சிறப்பாக உள்ள குருவியினம். கபில நிறத்தையும் சிவப்பு நிறத்தையும் உடையது. மிகவும் சத்தமாகக் குரலெழுப்பும். குழுவாக வாழும். ஈரவலயத்திலும் மலைநாட்டின் காடுகளிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வாழும்.

## வெண் தலை மைனா (Ceylon white-headed starling)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1987.05.18
**அளவு:** 24×38
**பெறுமதி:** 5.00




மைனாவைவிட சற்றுச் சிறியது. ஆண் குருவியும் பெண் குருவியும் உடல் அமைப்பில் ஒரே விதமானவை. சோடியாகவோ, கூட்டமாகவோ வாழும். மர உச்சியிலிருந்து குரலெழுப்பும். இது அபூர்வமாகக் காணக்கூடிய குருவியாகவும் இலங்கைக்கே உரிய சிறப்பினக் குருவியாகவும் கருதப்படுகின்றது. இவை சிங்கராஜ வனம், சமனல மற்றும் அவற்றை அண்மித்த பகுதிகளில் மாத்திரமே காணப்படுகின்றன.

## சாம்பல் தலை சிரிக்கும் குருவி (Ashy-Headed Laughing Thrush)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1993.07.14
**அளவு:** 42×30
**பெறுமதி:** ரூபா 3.00




இலங்கைக்குரிய சிறப்புக் குருவி. ஆண் குருவியும் பெண் குருவியும் உடலமைப்பில் ஒரே விதமானவை. மெல்லிய குரலைக் கொண்டிருந்தாலும் உரத்துக் குரலெழுப்பும். இவை கூட்டமாகத் தரைக்கு அண்மையில் திரியும். ஈர வலய அடர்ந்த காடுகளில் மாத்திரம் வாழும்.

## கபில நிறத்தலைக் குருவி (Brown capped babbler)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1993.07.14
**அளவு:** மி.மீற்றர் 42×30
**பெறுமதி:** ரூபா 4.00




ஆண் குருவியும் பெண் குருவியும் தோற்றத்தில் சமமானவை. இவை இனிமையாகக் குரல் எழுப்பும். சோடியாகக் காணக்கூடியதாக இருக்கும். பெரும்பாலும் தாழ்நிலக் காடுகளில் காணக்கூடிய இலங்கைக்குரிய சிறப்பினக் குருவியாகும்.

## சிவந்த முகக்குருவி (Red-Faced malkoha)

**முத்திரை வெளியிடப்பட்ட திகதி:** 1993.07.14
**அளவு:** மி.மீற்றர் 42×30
**பெறுமதி:** ரூபா 5.00





இலங்கைக்கே உரிய சிறப்பினக் குருவி. ஆண், பெண் குருவிகள் உடல் அமைப்பில் ஒரே விதமாகத் தோற்றமளித்தாலும் பெண் குருவியின் கண்கள் வெண் நிறமாகவும் ஆண் குருவியின் கண்கள் கபில நிறமாகவும் உள்ளன. இவையால் வேகமாகப் பறக்க முடியாது. பெரும்பாலும் ஈரவலயக் காடுகளில் வசிக்கும். உலர் வலயத்தில் சில காடுகளில் சிறு தொகையாகக் காணலாம். சோடியாகவும் கூட்டமாகவும் வாழும்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நைகர்




**ஏனைய பெரிய நகரங்கள்:** ஸின்டெர், மராடி.

**மக்கள் தொகை** (2010): 15,878,271.

**மொழிகள்:** பிரென்ஞ் (அலுவலக மொழி), ஹயுசா, டிஜெர்மா.

**இனக்குழுக்கள்:** ஹயுசா 56%, டிஜெர்மா 22%, பியூலா 8.5%, டுயாரெக் 8%, பெரிபெரி (கனவ்ரி) 4.3%, அரபு; டவ்பவ் மற்றும் கவர்மென்ட்ச்சி 1.2 %.

**சமயங்கள்:** இஸ்லாம் 80%, உள்ளூர் மத நம்பிக்கைகளும் கிறிஸ்தவமும் 20%.



நியாமி நகரின் ஒருபக்கத் தோற்றம்

**அரசு:** ராணுவ ஜுன்டா ஆட்சி.

**தேசிய பெயர்:** ரிபப்ளிக் டு நைகர் (Republic of Niger).

**சுதந்திரம்:** பிரான்சிடமிருந்து, 1960 ஒகஸ்ட் 3 ஆம் திகதி பிரகடனப்படுத்தப் பட்டது.

**தேசிய விடுமுறை தினம்:** குடியரசுதினம் டிசம்பர் 18.

**ஜனநாயக மேல் பிரிவுக் கவுன்சில் ஜனாதிபதி** (2010): மேஜர் சாலோ ஜிபோ.

**பிரதமர்** (2010): மஹமது டன்டா.

**எழுத்தறிவு:** 28.7%.

**நாணயம்:** CFA பிரேங்.

**இணையத்தளக் குறியீடு:** .ne

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +227

**தேசிய கீதம்**

Aupres du grand Niger puissant
Qui rend la nature plus belle,
Soyons fiers et reconnaissants
De notre liberte nouvelle!...என ஆரம்பமாகின்றது.

## புவியியல்

நைகர், மேற்கு ஆபிரிக்காவின் சஹாரா பிராந்தியத்தில் அமைந்துள்ளது. இந்த நாட்டைச் சுற்றி மாலி, அல்ஜீரியா, லிபியா, சாட், நைஜீரியா, பெனின், புர்கினா ஃபெஸோ ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன. நைகர் நதியானது தென்மேற்குப் பிரதேசத்தில் ஊற்றெடுத்து நாட்டை ஊடறுத்துப் பாய்கின்றது. நாட்டின் மிகத் தாழ்மையமாகவும் நைகர் நதியே விளங்குகின்றது. நாட்டின் உயர் மலைச்சிகரமாக மொன்ட் இடொகால்-என்-டக்ஹெஸ் சிகரம் விளங்குகின்றது. எயார் மாஸிஃப் மலையில் காணப்படுகின்ற இச்சிகரம் 2022 மீற்றர் (6634 அடி) உயரமாகும்.





பிரதமர்

**மொத்தப் பரப்பு:** 489,189 சதுர மைல் (1,267,000 ச.கி.மீ).

**நிலப்பரப்பு:** 489,072 ச.மைல் (1,266,699 ச.கி.மீ)

**தலைநகரமும் பெரிய நகரமும்:** நியாமி.




அகாடிஸ் பெரிய பள்ளிவாசல்

## வரலாறு

சஹாரா பிராந்தியத்தில் இருந்து இடம்பெயர்ந்த பூர்வீக டுயாரெக் இனத்தவர்களே இன்றைய நைகர் நாட்டில் முதன் முதலாக குடியேறியவர்களாவர். அதன்பின் 14 ஆம் நூற்றாண்டில் ஹயுசா இனத்தவர்களும் அதனைத் தொடர்ந்து பல்வேறு இனக்குழுக்களும் இங்கு குடியேறின. 1896 இல் நைகர் நாடு பிரான்சிய குடியேற்றமாக, பிரெஞ்ச் மேற்கு ஆபிரிக்காவுடன் இணைக்கப்பட்டது. 1922 இல் பிரான்ஸ் இதனை தனியானதொரு காலனியாக வைத்து ஆட்சி நடத்தியது. 1958 இல் வாக்காளர்கள் பிரான்சிய பாங்கினாலான அரசியலமைப்பு ஒன்றிற்கு அனுமதி வழங்கினர். 1959 இல் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு சமூக ஆட்சிக்கு வித்திட்டபொழுதிலும், அடுத்த ஆண்டே அது வாபஸ் பெறப்பட்டு பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெற்றது.









## கலாசாரம்

நைகர் மக்களின் கலாசாரமானது பிரெஞ்ச் காலனித்துவ ஆட்சியின் காரணமாக, பல்வேறு கலாசார தாக்கங்களுக்கு உட்பட்டது. காலனித்துவ ஆட்சிக்கு முன் நான்கு பிரதான கலாசாரப் பாரம்பரியங்களைக் கொண்டு விளங்கியது. இஸ்லாம் மதமானது 10 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இப்பிரதேசத்தில் பரவியது. பெரும்பாலான நைகர் மக்கள் இதனைப் பின்பற்றினர்.

**முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): பிரான்ஸ், நைஜீரியா, ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, பிரெஞ்ச் பொலினேசியா, கோட் டி ஐவரி, சீனா.



நியாமி பெரிய பள்ளிவாசல்

## காலநிலை

வட பிராந்தியம் முழுவதும் பாலைவனமாகும். அங்கு அதிக வெப்பமும் வறண்ட காலநிலையும் நிலவுகின்றது. தெற்குப் பிராந்தியம் வெப்பம் நிறைந்து காணப்பட்டாலும் பொதுவாக கணிசமான அளவு மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 24,000; செல்லிடத் தொலைபேசிகள் : 323,900.

**வானொலி நிலையங்கள்** (2001): AM 5, FM 6, SW 4. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2007): 5. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 200; இணையத்தளப் பாவனையாளர்கள்: 40,000.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்** (2004): மொத்தம் 14,565 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 3641 கி.மீ; செப்பனிடப்படாதவை 10,924 கி.மீ).

**நீர்வழிப் போக்குவரத்து:** நைகர் நதியில் மாத்திரம் பயணிக்கக்கூடிய காலங்களில் போக்குவரத்து நடைபெறுகிறது. சுமார் 300 கி.மீற்றர் தூரம் இங்கு நீர்வழிப் போக்குவரத்து நடைபெறுகிறது.

**விமான நிலையங்கள்:** 28.

## பொருளாதாரம்


**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 11%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், பருத்தி, மரவள்ளிக்கிழங்கு, பால் பண்ணைத் தொழில், கால்நடைகள். **தொழிலாளர் தொகை:** 70,000 (இதில் விவசாயம் 90%, கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை 6%, அரசு 4%). **கைத்தொழில்கள்:** யுரேனியச் சுரங்கம், உணவு உற்பத்தி, ரசாயனப் பொருட்கள்.

**இயற்கை வளங்கள்:** யுரேனியம், நிலக்கரி, தங்கம், பெற்றோலியம். **ஏற்றுமதிகள்** (2006); யுரேனியம், கால்நடை, கௌபி, வெங்காயம்.

**இறக்குமதிகள்** (2006): உணவுப் பொருட்கள், இயந்திரங்கள், போக்குவரத்து வாகனங்களும் உதிரிப்பாகங்களும், பெற்றோலியம்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில..

- நைகர் தேசிய நூதனசாலை
- ஹென்ரிச் பார்த்தின் வீடு
- பிராந்திய நூதனசாலை
- பிர்னி கார்ட்டர்
- சுல்தானின் மாளிகை
- அகாடிஸ் பெரிய பள்ளிவாசல்
- டிமியா பள்ளத்தாக்கு.






தேசிய இலச்சினை



நைகர் நதி



டியோரி ஹமானி சர்வதேச விமானநிலையம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்னஞ்சல் முகவரியில் @ சின்னம் எவ்வாறு உருவானது?

ஒவ்வொருவருடைய மின் அஞ்சல் முகவரியிலும் '@' என்ற சின்னம் வருவது யாவரும் அறிந்ததே. இந்தச் சின்னம் எப்படிப் புழக்கத்தில் வந்தது. மின்அஞ்சல் முகவரியில் முதன்முதலாக இந்த @ சின்னத்தை உபயோகித்தது Ray Tomlinson என்னும் ஒரு கம்ப்யூட்டர் பொறியியலாளர் ஆவார். இவர் 1971 ஆம் ஆண்டு முதலில் தனக்குத் தானே ஒரு மின் அஞ்சலை இந்தச் சின்னத்தை உபயோகித்து அனுப்பிக்கொண்டார். இதுபற்றி அவர் குறிப்பிடுகையில், "எவருடைய பெயரிலும் வராததும் குழப்பம் விளைவிக்காததுமான சின்னம் இருக்கிறதா என்று 'Keyboard இல் அக்கறையுடன் பார்த்தேன். பின்னர் இச்சின்னத்தை தேர்ந்தெடுத்தேன்" என்று கூறினார்.

இந்த @ சின்னம் கம்ப்யூட்டர் கிபோர்ட்டில் எப்படி இடம் பெற்றது? மொழி வல்லுனர்கள், எப்படி என்பதில் ஒத்துப்போகவில்லை. சிலர் நினைத்தனர், மத்திய காலத்தில் (Early Middle Ages), துறவிகள் கையெழுத்துப் பிரதிகளை சிரமத்துடன் படிக்கும்போது இலத்தீன் மொழி வார்த்தை 'ad', 'at' or 'towards' or 'by' என்று பல அர்த்தங்களைக் கொண்டிருப்பதைக் கண்டார். அநேக வல்லுனர்கள் இந்த சின்னம் சமீப காலத்தில் அதாவது, 18 ஆம் நூற்றாண்டில் புழக்கத்திற்கு வந்ததுதான் என்றனர்.

"பொருட்களின் விலையை குறிப்பிட ஏற்பட்டதுதான்" என்று வாதாடினர். உதாரணமாக; 10 பென்சுக்கு 5 அப்பிள் (5 apples @ 10 pence) மற்றும் ஒரு மொழி வல்லுனர் ஆராய்ச்சியாளர் Denis Muzerelle சொல்கிறார், "இது ஃபிரெஞ்ச், ஜேர்மனிய வியாபாரிகள் எழுத்து 'a' யை வேகமாக உச்சரிக்கும்பொழுது ஏற்பட்ட திரிபு என்கிறார். ஆனால், ஜூலை மாதம் 2000 ஆம் ஆண்டில் இத்தாலிய ஆராய்ச்சியாளர் ஒருவர், இந்தச் சின்னம் @ 14 ஆம் நூற்றாண்டின் வியாபார தஸ்தாவேஜுகளில் காணப்படுவதைக் கண்டுபிடித்தார். இந்தச் சின்னம் ஓர் அளவை "The 'anfora' or jar குறிக்க உபயோகிக்கப்பட்டது" என்றார்.

Giorgio stabile 1492 ஆம் வருடத்திய இலத்தீன்-ஸ்பானிஷ் அகராதியில் 'anfora' என்பது 'arroba' (ஒரு நிறுவளளவை) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடித்தார். ஆகையால், 1885 இல் வியாபார ரீதியான 'a' (The Commercial a) முதல் மொடலான அண்டர்வுட் தட்டச்சு மெஷினில் சேர்க்கப்பட்டுள்ளது. இதே 80 வருடங்களுக்குப் பிறகு அங்கிருந்து ஸ்டாண்டெர்ட் கம்ப்யூட்டர் கேரக்டரில் (Such as Ascii) இடம் பெயர்ந்து விட்டது.





தற்போதைய பிரச்சினை இந்த @ சின்னத்தை எப்படி உச்சரிப்பது?

ஸ்பானியர்கள் இதை 'arroba' என்றும், ஃப்ரெஞ்சுக்காரர்கள் 'arrobase' என்றும் அமெரிக்கர்களும் பிரிட்டிஷாரும் 'at-sign' என்றும் ஜேர்மனியர் (at-Zeichen) என்றும் எஸ்தோனியர் (at-mark) என்றும் ஜப்பானியர் (atto maak) என்றும் உச்சரிக்கிறார்கள். ஆயினும், அதிகமான பாஷைகளில், இந்தச் சின்னம் பலதரப்பட்ட உருவகம், பொதுப்படையாக, பிராணிகளுக்கு ஒப்பிடப்படுகிறது. ஜேர்மனியர், ஃபின்ஸ், ஹங்கேரியன், போல்ஸ், தெற்கு ஆபிரிக்கர்கள், இந்தச் சின்னத்தைக் குரங்கின் வாலாகப் பார்க்கிறார்கள் மற்றும் சிலர் நத்தைக்கு ஒப்பிடுகிறார்கள். இப்படி பலவிதம்.

**ஜெ.டிசோகுமார்**

---

## தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## தொழிற்தொடர்பு, மனிதவள அமைச்சு

NPS SRI LANKA

விஜய்

# உற்பத்தித்திறன் ஓவியப் போட்டி - 2010

## வினைத்திறனை வீட்டிலிருந்து ஆரம்பிப்போம்



அரச நிறுவனமாகிய தேசிய உற்பத்தித்திறன் நிறுவனமானது இம்முறையும் 2010 ஆம் ஆண்டிற்கான சித்திரப் போட்டியை நடத்துகின்றது.

**'வினைத்திறனை வீட்டிலிருந்தே ஆரம்பிப்போம்'** என்ற தலைப்பிலேயே இந்த சுவரொட்டி (போஸ்டர்) சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. நமது வீட்டில் வினைத்திறனை ஒழுங்காக கடைப்பிடித்தால்தான் நமது பாடசாலை, காரியாலயம் சமூகம் நாடு போன்றவற்றையும் வினைத்திறன் மிக்கதாக ஆக்கமுடியும். எனவே, வீட்டில் வினைத்திறனை மேற்கொண்டால் அது நாட்டின் மேம்பாட்டிற்கும் பயன்மிக்கதாக அமையும்.

எனவே, கீழ் காணப்படும் அம்சங்களைக் கவனத்தில் கொண்டு உங்களுடைய சுவரொட்டி சித்திரத்தை வரையமுடியும்.

1. வீட்டுத்தோட்டம் வினைத்திறன் மிக்க இடமாக எடுத்துக்காட்டி சித்திரம் வரையலாம்.
2. உங்களுடைய வீட்டை முறையாக அமைத்து இருக்கின்ற இட வசதிக்குள் கூடிய பயனைப் பெறுவதைக் காட்டும் சித்திரமாக அமையலாம்.
3. வீட்டின் பாதுகாப்பை எடுத்துக்காட்டும் விதமான சித்திரம்.
4. வீட்டின் அவசியமற்றவற்றை அப்புறப்படுதலும் அவசியமானவற்றை ஒழுங்குபடுத்தி சீராக வைத்தல்.
5. வீடானது சுத்தமும் சுகாதாரமும் மிக்கதாக இருப்பதான உணர்வை ஏற்படுத்தும் விதமான சித்திரம்.
6. வீட்டில் பொருளாதார ஸ்தீர நிலையானது, உயர்ந்த பழக்கவழக்கங்களை ஏற்படுத்தும் என்பதை விளக்குதல்.
7. வாழ்க்கையை இயல்பான தன்மை மிக்கதாக எடுத்துக்கொள்ளத்தக்க வழிமுறைகளை காட்டும் சித்திரங்கள்.
8. வீட்டில் நிதி கையாளுகை மற்றும் சிக்கனத்தை உணர்த்தும் சித்திரங்கள்.
9. நமது கலாசாரத்தைப் பாதுகாப்பதை உணர்த்தும் சித்திரங்கள்.

**இப்போட்டி 5 பிரிவுகளாக நடத்தப்படும்**

1. பாடசாலை மட்டம் - தரம் 1 தொடக்கம் 5 வரை
2. பாடசாலை மட்டம் - தரம் 6 தொடக்கம் 11வரை
3. பாடசாலை மட்டம் - தரம் 12 தொடக்கம் 13 வரை
4. பல்கலைக்கழக மட்டம் - பல்கலைக்கழக மாணவர்கள்
5. பகிரங்க மட்டம் - இலங்கையர் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**ஓவியத்தின் அளவு**

அளவு - 18x24 அங்குலம்

'பிரிஸ்டல் போர்ட்' அல்லது ஓவியம் வரைவதற்கு பயன்படுத்தும் அட்டைகள், தாள்கள் எதையாவது பயன்படுத்தலாம்.

மொழி - தமிழ், சிங்களம், ஆங்கிலம்

**பரிசு விபரம்**

**பாடசாலை பிரிவு 1 மற்றும் 2**

1 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்

**பாடசாலை பிரிவு 3**

1 ஆவது பரிசு - ரூபா 20,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்

**பல்கலைக்கழக மட்டம்/பகிரங்க மட்டம்**

1 ஆவது பரிசு - ரூபா 30,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 20,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட வெற்றியாளர்களுக்கு மட்டுமன்றி தேர்வு செய்யப்படுகின்ற ஏனைய ஓவியங்களுக்கும் திறமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களது ஓவியங்களை உங்கள் பகுதிக்குரிய பிரதேச செயலகத்தின் தொழிற்தொடர்பு மற்றும் மனிதவள அமைச்சின் உதவியாளரிடமும் கையளிக்கலாம்.

**போட்டி விதிமுறைகள்**

1. அனுப்பப்படுகின்ற ஓவியம் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
2. ஒருவர் எத்தனை ஓவியங்களையும் அனுப்பலாம். ஆனால், ஒன்றுக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் கீழ் ஓவியங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. பாடசாலை மட்டத்தில் அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.
5. சகல பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
6. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் தம்மை உறுதி செய்தல் வேண்டும்.
7. போட்டியாளர்கள் தமது ஓவியத்தின் பின்புறத்தில் இங்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிக் கூப்பனை ஒத்த கூப்பன் ஒன்றினைத் தயாரித்து நிரப்பி ஒட்டுதல் வேண்டும்.
8. போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் அனைத்தும் நடுவர் குழுவொன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்படும். நடுவர் குழுவின் முடிவே இறுதித் தீர்ப்பாகும். வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் கொழும்பில் வைத்து வழங்கப்படும்.
9. நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஓவியங்கள் மற்றும் இவற்றை பிரசுரிக்கும் உரிமையோ, தேவை கருதி அவற்றைப் பயன்படுத்தும் உரிமையோ தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கே உரித்துடையதாகும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. i. மாவட்டம் ..........
   போட்டிப் பிரிவு ..........
2. i. முதல் பெயர் .......... (ஆங்கில தனியெழுத்தில்)
   ii. முழுப் பெயர் ..........
3. i. முகவரி .......... (ஆங்கில தனியெழுத்தில்)
   ..........
   ..........
   ii. தொலைபேசி ..........
4. வயது ..........
5. i. பாடசாலையின் பெயர்/முகவரி
   ..........
   ..........
   ii. வகுப்பு (தரம்) ..........
6. பல்கலைக்கழக மாணவர்களாயின்
   i. பல்கலைக்கழகத்தின் பெயர்
   ..........
   ii. கல்வி கற்கும் பிரிவு (பீடம்)
   ..........

..........
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் முற்றிலும் உண்மையானவையே என உறுதிப்படுத்துகின்றேன்.**

..........
பாடசாலை அதிபர்/பீடாதிபதி
(கையொப்பம்/றப்பர் முத்திரை)

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2010.10.15**
**அனுப்ப வேண்டிய முகவரி :**
**பணிப்பாளர்,**
**தேசிய உற்பத்தித்திறன் செயலகம்,**
**இல 318, ஹைலெவல் வீதி, கொழும்பு-06.**

ஊடக அனுசரணை: விஜய் சிசு

பரிசு அனுசரணை: O-KAY

மேலதிக விபரங்களுக்கு:- தொலைபேசி 011-2812163/6, ஃபெக்ஸ்: 011- 2812162, மின்னஞ்சல் - nposl@nps.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம் (கடந்த வாரத் தொடர்ச்சி...)

**நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்**

★ ***25 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.***

25. 1kg சீனியின் விலை ரூபாய் 60.00 ஆகும். 2kg 750g சீனி வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?

ரூபாய் ..............................................

26. 2kg 500g நிறையுள்ள தேயிலையிலிருந்து, எத்தனை 250g தேயிலைப் பைக்கற்றுக்களைத் தயாரிக்க முடியும்?

..............................................

27. 418 தோடம்பழங்களை ஒருவருக்கு 4 வீதம் எத்தனை பேருக்குப் பகிர்ந்து கொடுக்கலாம்?

.............................. மீதி எவ்வளவு? ..............................

28. ஒரு வரிசையில் 57 தென்னம்பிள்ளைகளை நட முடியுமாயின், 6 வரிசையில் எத்தனை தென்னம்பிள்ளைகளை நட முடியும்?

..............................................

29. நாடகமொன்றைப் பார்ப்பதற்கு 3 நாட்களில் 796, 89, 863 பேர் வருகை தந்தனர். நாடகம் பார்க்க வந்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................

30. லவன் ரூபாய் 162.00 இற்கு பால்மா பைக்கற் ஒன்றையும் ரூபாய் 208.00 இற்கு 1kg பருப்பையும் வாங்கிய பின்னர் ரூபாய் 500.00 தாள்காசைக் கொடுத்தான். அவனுக்கு கிடைத்த மீதிப் பணம் எவ்வளவு?

..............................................

31. எண் 16 ஐ ரோமன் எண்குறியில் எழுதுக.

..............................................

32. மாலா 8m 75cm நீளமான காகித சங்கிலியையும் சாந்தி 2m 38cm நீளமான காகித சங்கிலியையும் தயாரித்தனர். இருவரும் தயாரித்த காகித சங்கிலியின் மொத்த நீளம் யாது?

..............................................

33. கட்டடமொன்றின் நீளம் 80m 45cm உம் இன்னொரு கட்டடத்தின் நீளம் 56m 78cm உம் எனின், நீளங்கூடிய கட்டடம் மற்றையதைவிட எவ்வளவு நீளம் கூடியதாகும்?


..............................................

★ **ஒரு பூரணமற்ற சிட்டை கீழே காணப்படுகிறது. அதில் உள்ள நான்கு வெற்றிடங்களையும் நிரப்புக.**

| பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| பென்சில் | 6 | 5 | 00 | 30 | 00 |
| அடிமட்டம் | 3 | 12 | 00 | 34. ..... | ..... |
| வரைதல் புத்தகம் | 35. ......... | 8 | 00 | 40 | 00 |
| கலர் பெட்டி | 6 | 36. ...... | ...... | 36 | 00 |
| கொப்பி | 37. .......... | 20 | 50 | 41 | 00 |
| | மொத்தம் | | | 38. ....... | ....... |




★ ***மாணவர்கள் விரும்பும் நான்கு வகையான உணவு வகைகள் வரைபில் காட்டப்பட்டுள்ளன. வரைபை நன்கு அவதானித்து, கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.***




39. இடியப்பத்தைவிட கடலையை எத்தனை மாணவர்கள் அதிகமாக விரும்புகின்றனர்?

..............................

40. பாணை 9 மாணவர்கள் விரும்புகின்றனர். இதனை நிரல் வரைபில் குறித்து நிழற்றுக.

## கணிதம் விடைகள்

(செப்டெம்பர் 01, 08 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

*(01) 2 (02) 3 (03) 2 (04) 2 (05) 2 (06) 2*

*(07) 2 (08) 3 (09) 1 (10) 3 (11) 2 (12) 3*

*(13) 3 (14) 3 (15) 3 (16) 3 (17) 3 (18) 1*

*(19) 3 (20) 2 (21) 2 (22) 3 (23) 3 (24) 2*

*(25) 165.00*

*(26) 10 பைக்கற்றுகள் (27) 104, 2*

*(28) 342 தென்னம்பிள்ளைகள் (29) 1748*

*(30) ரூபாய் 130.00*

*(31)* XVI

*(32) 11m 13cm*


*(33) 23m 67cm*

*(34) 36.00 (35) 5*

*(36) 6.00 (37) 2*

*(38) 183.00 (39) 5*

*(40)*




## சுற்றாடல்

பெயர்: ............................... **நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்**

★ ***01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின்கீழ்க் கோடிடுக.***

01. ஆவணி மாதத்தில் பூக்கும் தாவரம் எது?
(1) றப்பர் (2) இலுப்பை (3) ரம்புட்டான் (4) வேம்பு

02. ஔடத பானங்கள் தயாரிக்கப் பயன்படும் பூ எது?
(1) வில்வம் பூ (2) வைகாசிப் பூ
(3) அலரிப் பூ (4) அந்தூரியம்

03. ஆறு இதழ்களைக்கொண்ட பூ எது?
(1) திருவாத்திப் பூ (2) பவளமல்லிகை
(3) எக்சோரா (4) கடதாசிப் பூ

04. நறுமணத்தைக்கொண்ட பூ எது?
(1) குண்டு மல்லிகை (2) கடதாசிப் பூ
(3) முள்முருக்கு (4) செவ்வரத்தைப் பூ

05. வீட்டுத் தோட்டத்தில் உள்ள பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பிராணி எது?
(1) தேனீ (2) செண்பகம்
(3) நத்தை (4) தேன்குருவி

06. நாக்கை வெளியில் நீட்டி உணவைப் பெற்றுக்கொள்ளும் பிராணி எது?
(1) முயல் (2) தவளை (3) ஆடு (4) மாடு

07. மோப்பம் பிடிக்கும் தன்மை, கூர்மையான கேட்கும் திறன் உடைய பிராணி எது?
(1) புலி (2) குரங்கு (3) நாய் (4) பூனை

08. கொள்ளை நோயைப் பரப்பும் பிராணி எது?
(1) நுளம்பு (2) எலி (3) பூனை (4) ஈ

09. நிலத்தின்மீது விழும் பல்வேறு கழிவுப் பொருட்களை சிறுசிறு துண்டுகளாக்கி உக்குவதற்கு உதவும் பிராணி எது?
(1) காகம் (2) கறையான் (3) அட்டை (4) அணில்

10. பாம்பு கடித்த ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாகச் செய்யவேண்டிய மிகப் பொருத்தமான செயல் எது?
(1) பாம்பைப் பிடித்துப் பாதுகாப்பாக வைத்திருத்தல்
(2) கடித்த இடத்திற்கு சிறிது மேலே ஒரு துணித் துண்டினால் கட்டி விடுதல்
(3) கடித்த இடத்தில் உகந்த மருந்தைப் பூசுதல்
(4) பருகுவதற்கு உகந்த பானத்தைக் கொடுத்தல்

11. வீடுகளில் தனிப்பட்ட ஒருவரால் பயன்படுத்தப்படும் பாவனைப் பொருள் எது?
(1) தொலைக்காட்சி (2) கைக்குட்டை
(3) தொலைபேசி (4) மின்னழுத்தி

12. சரியான கொண்ணிலையில் நடக்கும் ஒருவரின் பாதணியின் எந்தப்பகுதி அதிகளவு தேய்ந்திருக்கும்?
(1) பாதணியின் முன்பகுதி
(2) பாதணியின் அடியின் பிற்பகுதி சமச்சீராக தேய்வடைதல்
(3) பாதணிகளின் அடி பக்கவாட்டில் தேய்வடைதல்
(4) பாதணி அடி ஒரு பக்கமாகத் தேய்வடைதல்


13. இலங்கை இந்தியாவுக்கு எத்திசையில் அமைந்துள்ளது?
(1) வடக்கு (2) மேற்கு (3) தெற்கு (4) கிழக்கு

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டை வேகும்போது....

முட்டை வேகும்போது, திரவ நிலையிலுள்ள வெண்கரு கடினமடைகிறது. ஆனால், திரவ நிலையிலுள்ள மஞ்சள் கரு மிருதுவாக மாறுவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.



வெப்பப்படுத்தப்படும்போது, முட்டைப்புரதம் திரிந்து கெட்டியாகிறது. அத்துடன், வெண்கருவிலுள்ள புரதம் மஞ்சள் கருவிலுள்ள புரதத்தைவிட மாறுபட்டது. இதனால், வெப்பம் ஏற்றப்படும்போது வெண்கரு கடினமாகிறது. மஞ்சள் கரு மிருதுவாகிறது. மஞ்சள் கருவிலுள்ள கொழுப்பினால், பின்னர் அது உடைகிறது.

சிறிதளவு வெந்த முட்டை பச்சை முட்டைய்யவிட எளிதில் ஜீரணமாகும். ஆனால், அதிகமாக வேக வைக்கப்பட்ட முட்டையின் புரதம் கடினமாவதால் செரிமானம் சிரமமாகும். முட்டை 72°C வெப்பநிலையில் திடமாவதால், வழக்கமாக செய்வதுபோல் 100° வரை கொதிக்க வைக்கத் தேவையில்லை. கொதிக்கும்போது வெண்கருவில் உள்ள கந்தகமும் மஞ்சள் கருவிலுள்ள இரும்பும் இணைந்து கருமையான இரும்பு சல்பைட்டை உருவாக்குகிறது.

# நீளமான ரயில்பாதை



ரஷ்யாவின் ட்ரான்ஸ்-சைபீரியன் ரயில்பாதைதான் (Trans-Siberian Railway) உலகின் மிக நீளமான ரயில்பாதையாகும். 9,259 கிலோமீற்றர் நீளமுடைய இந்த ரயில்பாதையானது தலைநகர் மொஸ்கோவையும் ஐரோப்பாவை ஒட்டியுள்ள ரஷ்யாவின் தூரகிழக்கு மாநிலங்கள், மொங்கோலியா, சீனா, ஜப்பான் கடல் ஆகியவற்றை இணைத்து அமைக்கப்பட்டுள்ளது.




இந்த ரயில் பாதையின் முழுநேர நிர்மாணப் பணிகள் 1891 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் அப்போதைய நிதி அமைச்சர் சேர்கி விட்டே என்பவரின் மேற்பார்வையின்கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

# 'அதிகம் படித்தால் முடியெல்லாம் கொட்டிவிடுமா?'



அதிகம் படித்தால் தலையில் முடியெல்லாம் கொட்டி வழுக்கையாகிவிடும் என்று சில மாணவர்களிடையே (குறிப்பாக ஆண்பிள்ளைகளிடையே) ஒரு கருத்து நிலவுகின்றது. நன்கு படித்த மேதாவிகள், விஞ்ஞானிகள் மற்றும் அறிஞர்களை இதற்கு சிறந்த உதாரணங்களாக அவர்கள் கொள்கின்றனர்.

உண்மையில் இது தவறானதொரு கருத்தாகும். முடி உதிர்வதற்கு ஏராளமான காரணங்கள் இருக்கலாம். முடி வளர்ச்சிக்கு புரதங்களும் தாதுக்களும் அவசியம். இவை குறைவாகக் காணப்பட்டாலும் முடி உதிரலாம். தவிர; தொற்றுநோய், நீண்ட நாள் காய்ச்சல், புற்றுநோய், தைபோய்ட், மலச்சிக்கல், மன அழுத்தங்கள் (கவலை, பயம், பதற்றம் போன்றவற்றால் ஏற்படுகின்ற), மனச்சோர்வு ஆகியவையும் முடி உதிர்வதற்கு ஏதுவாக அமையலாம். அத்துடன், ஹோர்மோன் சுரப்பில் சமநிலை இல்லாமல் போனாலும் இந்தப் பிரச்சினை ஏற்படலாம்.

எனவே, தேவையில்லாத விடயங்களை நம்பி மனதை அலட்டிக்கொள்ளாமல் சிறப்பாகப் படித்து நற்பிரஜையாகுங்கள்.

# மாணவர்களிடையே ஆற்றல்



ஆற்றல் என்பது, ஒரு நபரின் திறமையை எடுத்துக்காட்டும் அம்சமாகும். இத்திறமையானது ஆளுக்காள் வேறுபடும். இது மனிதர்களுக்கு மாத்திரமன்றி, பிற உயிரினங்களிலும் வேறுபடும். ஒவ்வொரு மாணவரும் வெவ்வேறு ஆற்றல்களைக் கொண்டிருப்பர். இதை ஆசிரியர் அறிந்து கொள்வதானது வெற்றிகரமான கற்பித்தலுக்கு உதவும்.

மாணவர் ஒருவர் ஓர் எண்ணத்தை எண்ணும்போது அவ்வெண்ணம் உருவாகக் காரணமாக இருப்பது அவருடைய ஆற்றலாகும். இது மரபு ரீதியான, சுற்றாடல் ரீதியான தாக்கங்களால் உருப்பெறுகின்றது. இவ்வாறான ஆற்றலை தம்மிடம் இனங்கண்டு, ஒவ்வொரு மாணவரும் அதனை வளர்க்க முயற்சி செய்ய வேண்டும்.



கல்வி நடவடிக்கைகளைப் பொறுத்தளவில் கற்றல் நிகழ்வைத் திட்டமிடுவதற்கும் கற்பதற்கும் வழிகாட்டுவதற்கும் பிள்ளைகளுக்கு மதிநுட்பம் தேவையாகும். இந்த மதிநுட்பம் ஆனது ஒரு பொது ஆற்றல் என 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர்களான ஹெர்பாட் இன்பென்சர், பிரான்சிஸ் கால்டன் என்போர் குறிப்பிட்டுள்ளனர். அதாவது, இந்த ஆற்றல் விசேட ஆற்றலிருந்து வேறுபட்டதாகும்.




# கல்வி



## முகாமைத்துவம் - 19

## கற்றலுக்கான ஆலோசனைகள்



கல்வி கற்கும் மாணவர்களிடத்தில் காணப்படும் ஆற்றல்கள் மிகச் சிறந்த ஆற்றல்களாகும். ஒரு மாணவரால், எந்த விடயத்தை சிறப்பாகவும் நேர்த்தியாகவும் செய்ய முடிகிறதோ அதுவே ஆற்றலாகும். இவ்வகையான ஆற்றல்களை மாணவரொருவர் சிறப்பாகப் பயன்படுத்தினால் உயர்ந்த சாதனைகளைப் புரியமுடியும்.

### ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள....

ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள, மாணவர்கள் அறிவுசார் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். ஒரு விடயம் பற்றித் தனக்குள் ஆய்வு செய்ய வேண்டும். தகவல்களைப் பெற வேண்டும். இந்த அடிப்படையில் ஒரு மாணவரது அறிவு பரந்த அளவில் செயற்பட்டால் ஏதாவது ஒரு விடயத்திலாவது அவருக்கு ஆற்றல் ஏற்படும். இவ் ஆற்றலானது கல்வியில் மாத்திரமன்றி நடைமுறைச் செயற்பாட்டிலும் ஏற்படும்.

நாம் வளர்ச்சியடையும்போது எமது உடல் வளர்ச்சியடைகிறது. கூடவே எமது ஆற்றல்களும் வளர்கின்றன. ஆற்றல்களின் வளர்ச்சி கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் நாம் அவற்றை உணர்கிறோம். சுமார் 100, 150 ஆண்டுகளுக்குமுன் ஆண்கள்தான் பெண்களைவிட விவேகம் கூடியவர்கள் என்று கருதப்பட்டது. ஆனால், இன்றைய ஆய்வுகளின்படி, பெண்கள் ஆண்களைவிட விவேகம் கூடியவர்களாகவும் ஆற்றல் மிக்கவர்களாகவும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாணவரிடத்தும் வெவ்வேறு ஆற்றல்கள் காணப்படினும் அதனை முன்னேற்றுவதிலேயே சிறந்த ஆற்றல் தங்கியுள்ளது. அந்தவகையில், சமூக-பொருளாதார நிலை, பாடசாலை செல்லல், சிறந்த தேகாரோக்கியம் உட்பட ஏனைய காரணிகளும் மாணவரின் ஆற்றல்களை வளர்க்க உதவுகின்றன.

ஆகவே, சாதாரணமாக கல்வி கற்பதைவிட, ஒவ்வொரு மாணவரும் தனது ஆற்றல்களை உபயோகித்து அதன்படி கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வது இறுதி வரை நீடிக்கும்.

(தொடரும்)



எம்.ஏ.எஃப்.சப்ரானா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்கராஜ வனத்திற்குச் செல்வோம்...



உலகில் உள்ள பழைமையான வெப்பமண்டல மழைக்காடுகளின் பட்டியலில் இலங்கையின் உயிரியல் பல்வகைமையின் இதயமாகக் கருதப்படும் சிங்கராஜ வனமும் உள்ளடங்கியிருக்கின்றது. இது தற்போது உலகில் எஞ்சியுள்ள என்றும் பசுமையான மழைக்காட்டுத் தொகுதிகளில் ஒன்றாகும். மனித சஞ்சாரமற்ற வெப்பமண்டல மழைக்காடாக இது கருதப்படுகின்றது.

ஈர வலயத்தில் காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியதாக சுமார் 11,187 ஹெக்டேயர் (23,000 ஏக்கர்) நிலப்பரப்பில் அமைந்துள்ள சிங்கராஜ வனமானது உலகம் முழுவதிலும் உள்ள சுற்றாடல் நிபுணர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ள சுற்றாடல் தொகுதியாகும். உலக மரபுரிமை சுற்றாடல் பாதுகாப்புப் பட்டியலுக்குள் உட்படுத்தப்பட்டுள்ள இந்த வனாந்தரமானது 1926 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி 'பாதுகாப்பு வனாந்தரம்' என அடையாளப்படுத்தப்பட்டது. எனினும், 1936 ஆம் ஆண்டு இது ரத்துச் செய்யப்பட்டது. 1975 ஆம் ஆண்டு சிங்கராஜ வனமானது பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1977 ஆம் ஆண்டு 'உயர் பாதுகாப்பு வனாந்தரமாக' இலங்கை அரசினாலும் 1989 ஆம் ஆண்டு 'உலக உரிமைச் சொத்து' என யுனெஸ்கோவாலும் பிரகடனப்படுத்தப்பட்டது.

## புவியியல் தன்மை

சிங்கராஜ வனம் எப்போதும் மழைக்காடாக இருப்பதோடு, தென்மேல் பருவக் காற்றாலும் வடகீழ்ப் பருவக்காற்றாலும் மழையைப் பெறுகிறது. இக்காடு பிரதேசமானது தென்மேல் பருவக்காற்றால் (மே-செப்டெம்பர் வரை) மழையைப் பெறுகின்றது. இங்கு வருடாந்த மழைவீழ்ச்சி 3000-6000 மி.மீற்றருக்கு இடைப்பட்டதாகும். குறைந்த மழைவீழ்ச்சி...

இந்த வனத்தை சென்றடைவதற்கு நான்கு ...
- வெத்தாகல பாதை, இறக்கவானை - மோ...
நெலுவ பாதை, தெனியாய - பள்ளேகம ப...

மக்கள் இதனைப் பார்வையிட விரும்பின்... வழிகாட்டி ஒருவரின் வழிகாட்டல் இன்றி ... அனுமதி வழங்கப்படுவதில்லை.


கடல் மட்டத்திலிருந்து 300-1170 மீற்றர் ... அமைந்துள்ள சிங்கராஜ வனம் சப்ரகமுவ, ... இறக்குவானை மலைத்தொடர் மற்றும் பள்... 600 மீற்றரிலும் மேற்பட்ட உயரமான ஏழு ...

## மண்ணின் அ...

சிவப்பு, மஞ்சள் பொட்சொலிக் மண்ணும்... காணப்படும் இடங்களுக்கு அருகில் 'அலு... இங்கு நிலவும் வெப்பம், அதிக மழை போ... சிங்கராஜ வனத்திலுள்ள தாய்ப்பாறையான... அடைகிறது. ஆண்டு முழுவதும் கிடைக்கும்... ஈரலிப்பான தன்மை காணப்படுகின்ற பொ... அதிக வளமானதெனக் கூறமுடியாது.

## நீர்நிலை...

சிங்கராஜ வனத்திலிருந்து ஊற்றெடுக்கும்... பிரதான நதிகள் இரண்டாகும். 1. ஜின் கங்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ச்சியாக 50 மி.மீற்றர் பதிவாகியுள்ளது.
த பாதைகள் உள்ளன. அவை; கலவான
மார்னிங் சைட் பாதை, ஹினிதும -
பாதை என்பவையாகும்.
பின் வனபரிபாலனத் திணைக்கள
றி இப்பிரதேசத்திற்குள் நுழைவதற்கு

றர் (1000-4000 அடி) உயரத்தில்
வ, தென் மாகாணங்களில்
ள்ளத்தாக்கு வரை பரவியுள்ளது. இங்கு
ழ மலைகள் உள்ளன.

## அமைப்பு

னும் (Red, Yellow podzolic) நீர்
லுவியஸ்' மண்ணும் காணப்படுகின்றது.
பான்ற வானிலை நிலவரங்களினால்
னது கபுக், லெடரிக் மண்ணாக மாற்றம்
கும் பாரிய மழை காரணமாக
பாழுதிலும், சிங்கராஜ வனத்தின் மண்

## லகள்

தும் நீரிலிருந்து போஷிக்கப்படும்
ங்கை 2. களு கங்கை. தவிர; நாபொல

தொல, களுகன்தாவ, மஹா தொல, கொஸ்குவன கங்கை, பிட்டகெலே கங்கை, குடவ கங்கை போன்ற பல ஆறுகளும் சிங்கராஜ வனப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. அத்துடன், பிராமண எல்ல, கல்தொருவ, துலி எல்ல, ஊரு வெட்டுன எல்ல போன்ற நீர்வீழ்ச்சிகளும் காணப்படுகின்றன.

## உயிரினங்கள்

65 விதமான வண்ணத்துப்பூச்சிகளை இங்கு காணலாம். இலங்கைக்கு மட்டுமே உரித்தான 10 மிருக வகைகள் இங்கு காணப்படுவதோடு, மொத்தமாக இருபத்தேழு வகையான மிருகங்கள் இங்கு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 43 ஊர்வன வகைகள் உள்ளன. இலங்கைக்கே உரித்தான 26 விசேட பறவை இனங்களில் 25 வகைப் பறவைகள் இங்கு காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இங்குள்ள மொத்த பறவை இனங்கள் 158 ஆகும். சிங்கராஜ வனத்தில் 40 முலையூட்டிகள் இருப்பதோடு, அவற்றில் இலங்கைக்கே உரித்தானவை 7 ஆகும்.

## தாவர வகைகள்

வெப்பமண்டல மழைக்காடுகள் மற்றும் வெப்பமண்டல ஈரலிப்பு என்றும் பசுமையான தாவரங்களை உடைய சிங்கராஜ வனத்தில் ஆண்டு முழுவதும் பசுமையுடன் இருக்கும் ஐந்து அடுக்குகளைக்கொண்ட தாவரத் தொகுதியொன்றைக் காணலாம். மேலும், இங்குள்ள தாவரங்களில் எமது நாட்டிற்கே உரிய காட்டுக் கறுவா, காட்டு மிளகு போன்றவை காணப்படுவது சிறப்பானதாகும். இவை தவிர்ந்த வேறு தாவரங்களும் காணப்படுகின்றன. அழிவுற்ற தாவரங்கள் எனக் கருதப்படும் சில தாவரங்கள்கூட சிங்கராஜ வனத்தில் இனங்காணப்பட்டுள்ளது. சிங்கராஜ வனத்திற்கே உரிய தனித்துவமான தாவரங்கள் 13 உள்ளன. இங்குள்ள 75% மான தாவரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவரங்கள் என சுற்றாடல் நிபுணர்கள் இனங்கண்டுள்ளனர். சிங்கராஜ வனத்தில் நிலையான தாவரங்களும் உயரமான தாவரங்களும் காணப்படுகின்றன. இதனால், தரைக்கு சூரிய ஒளி குறைவாகவே கிடைக்கின்றது. உயர்ந்து செல்லும் கொடிகளுடனான தாவரங்கள், கிளைகள் அற்ற மரத்தண்டுகளைக்கொண்ட தாவரங்கள் எனப் பல்வேறு தாவர வகைகள் இங்கு காணப்படுகின்றமை சிங்கராஜ வனத்துக்குரிய சிறப்பம்சமாகும்.

**எமர்ஜென்ட் லேயர் (Emergent layer)**

இது 45 மீற்றரிலும் உயரமானதொரு தாவரத்தொகுதியாகும். ஆங்காங்கே காணக்கூடிய இந்த வகைத்தாவரத்தொகுதிக்கு சூரிய ஒளி நன்கு கிடைக்கின்றது.

**கெனோபி லேயர் (Canopy Layer)**

30 முதல் 45 மீற்றர் வரையிலான உயரத்தைக்கொண்ட தாவரத்தொகுதி இந்த வகைக்குள் அடங்கும். ஒன்றோடொன்று அருகருகே இல்லாமல் தொலைவில் வளரும் இந்த வகைத் தாவரங்களுக்கு சூரிய ஒளி நன்கு கிடைக்கின்றது. நன்றாகச் செழித்து வளரும் இத்தாவரத்தொகுதிக்கு அருகில் புதர்கள் நிறைந்து காணப்படும்.

**சப் கெனோபி லேயர் (Sub Canopy Layer)**

இது சூரிய ஒளி தரைமீது விழுவதைக் குறைக்கின்ற 15 முதல் 30 மீற்றருக்கு இடைப்பட்ட உயரத்தைக்கொண்ட ஒரு தாவரத்தொகுதியாகும்.

**அண்டர் ஸ்டோரி லேயர் (Under Storey Layer)**

5-15 மீற்றருக்கு இடையிலான அளவு உயரத்திற்கு வளரக்கூடிய ஒரு தாவரத்தொகுதியாகும்.

**கீழ் வளரி (Grounds Flora)**

புதர்கள் உள்ளிட்ட சில வகைத் தாவரத்தொகுதிகள் இதில் அடங்கும். இந்த வகைத் தாவரங்களுக்கு சூரியனின் ஒளி மிகக்குறைவாகவே கிடைக்கின்றது.

# ‘கருத்துணர்ந்து கற்றிடுவோம்’



முன்னொரு காலத்தில் ஒரு துறவி இருந்தார். அவர் பறவைகளுடன் பேசும் ஆற்றல் பெற்றவர். ஒருநாள் அவர் ஒரு வனத்தினூடாகச் சென்று கொண்டிருக்கையில் தூரத்தே ஒரு வேடன் பறவைகளைப் பிடிப்பதற்காக வலையொன்றையும் தானியங்களையும் எடுத்துக் கொண்டு பறவைகள் இருக்கும் இடங்களைத் தேடிச் சென்று கொண்டிருந்தான். அதனை அவதானித்த துறவி பறவைகளைச் காப்பாற்றும் நோக்குடன், பறவைகளை அதன் பஷையிலேயே அழைத்தார். எல்லாப் பறவைகளும் அவர் இருந்த இடம் வந்து சேர்ந்தன. அப்போது துறவி, ''வேடன் வருவான், வலை விரிப்பான், விதை தூவுவான், நாங்கள் சிக்கமாட்டோம்'' என்று சொல்லிக்கொடுத்தார். பறவைகளும் துறவி சொன்னதை அவ்வாறே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தன.

வேடன் அவ்விடம் மெதுவாக வந்து வலையை விரித்தான். விதைகளைத் தூவினான். விதைகளைக் கண்டதும் எல்லாப் பறவைகளும் துறவி சொன்னதையே சொல்லிக் கொண்டு வலையின் மேலுள்ள விதைகளை கொத்திக் கொத்தித் தின்ன ஆரம்பித்தன. ஒளிந்திருந்த வேடனும் தருணம் பார்த்து சுருக்குக் கயிற்றை இழுத்தான். எல்லாப் பறவைகளும் அவன் விரித்த வலையில் அகப்பட்டுவிட்டன. வேடன் வலையுடன் எல்லாப் பறவைகளையும் பிடித்துக்கொண்டு சென்றான். அப்போதும் வலைக்குள் இருந்த பறவைகள் துறவி சொன்னது போலவே, சொல்லிக்கொண்டு இருந்தன.

அதனைக் கேட்ட துறவி மிகுந்த கவலை கொண்டார். தான் சொன்ன விடயங்களின் கருத்தைப் பறவைகள் நன்கு புரிந்து கொண்டிருந்தால் உயிர் தப்பி இருக்குமே என மனம் நொந்தார்.

அந்தவகையில், மாணவர்களும் பாடங்களை மனனம் செய்தால் மட்டும் போதாது. அதன் ஆழமான கருத்துக்களையும் அறிந்து-புரிந்து நடந்தால்தான் உண்மையான வெற்றியைப் பெறலாம்.

*என்.மொஹமட் லாபீர், பதுளை.*

# ஆட்கொல்லி



காட்டின் வழியே நடந்து சென்றுகொண்டிருந்த ஒரு துறவியின் கண்களில் புதையல் ஒன்று தென்பட்டது. தங்க நாணயங்களும் தங்க நகைகளும் நிரம்பி வழிந்தபடி பெரிய செப்புக்குடமொன்றில் அப்புதையல் காணப்பட்டது.

அதைப் பார்த்த துறவி திடுக்கிட்டு நின்றார். அடுத்த வினாடி ஏதோ பேயைக் கண்டது. போல் அந்த இடத்திலிருந்து தலைதெறிக்க ஓடிவந்து அவர் தவம் செய்யும் மர நிழலில் அமர்ந்துகொண்டார்.

அப்பொழுது இரண்டு பணக்காரச் சகோதரர்கள் தங்கள் வேலைக்காரனுடன் வந்து கொண்டிருந்தனர். துறவியைப் பார்த்த அவர்களில் ஒருவன் அவரை வணங்கி, ''ஐயா! எதற்காக ஓடி வந்தீர்கள்? ஏதேனும் விலங்குகள் தங்களைத் துரத்தினவா?'' என்று கேட்டான்.

ஆனால், அத்துறவி ''இல்லை இல்லை. அதோ... அந்த மரத்தின் அடியே ஓர் ஆட்கொல்லி கிடக்கிறது. அதைப் பார்த்துப் பயந்துதான் ஓடி வந்தேன்'' என்று கூறினார்.

அந்தச் சகோதரர்களும் அவர்களுடன் வந்த வேலைக்காரனும் துறவி குறிப்பிட்ட ஆலமரத்தின் அடியில் போய் பார்த்தனர். அவர்கள் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

''அட புதையல்! இதைப் பார்த்தா அத்துறவி ஆட்கொல்லி என்று பயந்து ஓடினார்? என்று அந்தத் துறவியின் முட்டாள்தனத்தை நினைத்து மூவரும் சிரித்தனர்.



இரண்டு சகோதரர்களும் தங்கள் நம்பிக்கைக்குரிய வேலைக்காரனிடம் ''மாரி இந்தப் புதையலில் உனக்கும் பங்குண்டு. நாங்கள் குளித்துவிட்டு வரும்வரை புதையலைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்'' என்று கூறிவிட்டு பக்கத்திலிருக்கும் குளத்தை நோக்கிச் சென்றனர்.

வேலைக்காரன் மாரியின் மனதில் அந்தப் புதையல் பேராசையை ஏற்படுத்தியது. அதனால், எஜமானர்கள் இருவரையும் கொல்லத் திட்டமிட்டான். உடனே அருகிலிருந்த அரலிச் செடியிலிருந்த சில காய்களைப் எடுத்து அதிலுள்ள விஷத்தன்மையான விதைகளை அரைத்து அவர்கள் கொண்டு வந்திருந்த உணவில் கலந்துவிட்டான்.

குளித்துவிட்டு வந்த இரு சகோதரர்களும் வேலைக்காரனைப் பார்த்து ''மாரி நாங்கள் குளித்துவிட்டோம். நீயும் சென்று குளித்துவிட்டு வா. உணவருந்திவிட்டு புதையலை எடுத்துச்செல்வோம்'' என்றனர். மாரியும் குளத்திற்குக் குளிக்க சென்றான்.

அவன் குளித்துக் கொண்டிருந்த சமயம் ''வேலைக்காரனுக்கும் ஒரு பங்கு கொடுக்க வேண்டும். ஆதலால் அவனைக் கொன்றுவிட்டால், புதையல் எம் இருவருக்கும்தான்'' என்று ஏற்கனவே திட்டம் தீட்டி வைத்திருந்த அந்த இரு சகோதரர்களும் பதுங்கிப் பதுங்கி குளத்திற்கு சென்றனர்.

மாரி நீரினுள் மூழ்கியிருந்த சமயம் பார்த்து இருவரும் குளத்தில் இறங்கி மாரியை நீரில் அமிழ்த்தினர். இதனால், மாரி மூச்சுத் திணறி இறந்துவிட்டான். ''அப்பாடா ஒழிந்தான்'' என்று சொல்லிக் கொண்டே இருவரும் புதையல் இருந்த இடத்திற்கு வந்தார்கள்.

இருவருக்கும் ஒரே பசி. உணவருந்திவிட்டுப் பின்னர் புதையலை எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று முடிவு செய்த சகோதரர்கள் உணவு உண்ணப் பாத்திரத்தைத் திறந்தனர்.

விஷம் கலக்கப்பட்டிருப்பதை அறியாத அவர்கள், அந்த உணவை பிசைந்து சாப்பிட்டனர். சிறிது நேரத்தில், இருவரும் நுரையாக வாந்தி எடுத்து பரிதாபமாக இறந்து போனார்கள்.


ஆட்கொல்லி என அத்துறவி கூறியது சரியாகவே அமைந்து விட்டது.

**எம்.என்.எஃப்.ஸகியா,**
**தரம் - 8T,**
**விஹாரமகா தேவி ம.கல்.,**
**கண்டி.**



# வேண்டும்

கற்றிட வேண்டும்
கல்வியை
செய்திட வேண்டும்
உதவியை
எடுத்திட வேண்டும்
முயற்சியை
கூறிட வேண்டும்
உண்மையை
ரசித்திட வேண்டும்
இயற்கையை
எழுதிட வேண்டும்
கவிதையை



# ஐன்ஸ்டீன் பற்றிய ருசிகரத் தகவல்கள்

- ஐன்ஸ்டீன் தனது 9 ஆவது வயது வரையும் தங்கு தடையின்றிப் பேசாத காரணத்தால், பெற்றோர் அவரை மூளை வளர்ச்சி குன்றியவர் எனக் கருதினர்.
- ஐன்ஸ்டீனின் பெற்றோரை அழைத்த அவரது ஆசிரியர் ''உங்கள் பையனைப் போன்ற ஒரு முட்டாளை நான் இதுவரை பார்த்ததில்லை. என்னால் இவனுக்குப் பாடம் எடுக்க முடியாது. தயவுசெய்து இவனைக் கூட்டிக்கொண்டு போய் விடுங்கள். இவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதால் என் நேரம்தான் விரயமாகின்றது'' என்று கூறியிருக்கிறார்.
- சைக்கிளில் சுற்றுவது, ஜாலியாகப் பாட்டுக் கேட்பது என்பன ஐன்ஸ்டீனின் இளமைக்காலப் பொழுது போக்குகளாகும்.
- உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது இவர் எழுதிய ஒரு கட்டுரைக்கு, ஏதோ போனால் போகட்டும் என்று வெறும் பாதிப் புள்ளியே போட்டிருக்கின்றார்கள்.
- ''பல்கலைக்கழகத்திற்கெல்லாம் போய்ப் படிப்பேன் என்ற நம்பிக்கை எனக்குக் கிடையாது'' என்று தன் கைப்பட எழுதி வைத்திருந்தார் ஐன்ஸ்டீன்.
- 1952 ஆம் ஆண்டு இஸ்ரேல் ஜனாதிபதி பதவியை இவருக்கு வழங்க முன்வந்தபோது, அதனை ஏற்க அவர் மறுத்துவிட்டார்.

என்.எப்.அய்மா, கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை.



# புது விடியல்

இந்து மா ஆழியிலே - ஓர்
நித்திலமாம் எம்
ஈழமணி நாடு - நாம்
அதில் முத்துகளாம்.

யுத்தத்தின் சத்தம் - எம்
நித்திலத்தில் இல்லை
நித்தம் எம் நித்திலத்தில்
சமாதானம்!

சாதி சமய பூசல்களை
ஒழித்திடுவோம்.

வாத பேதங்களை
மறந்திடுவோம்.
இலங்கையின் நாமம்
துலங்கச் செய்திடுவோம்.
வளம் கொழிக்க
நலம் செழிக்க - என்றும்
முயன்றிடுவோம்.

பா.ஸப்வா,
தரம் - 11,
மாறை/அந்நூர் மு.வித்.,
கபுவத்த, தெனிபிடிய.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச எழுத்தறிவு தினம்

'எழுத்தறிவு சர்வதேச அபிவிருத்தியின் அடித்தளம்' இதுவே சர்வதேச எழுத்தறிவு தினத்தின் கருப்பொருளாகும்.

செப்டெம்பர் 08 ஆம் திகதி சர்வதேச எழுத்தறிவு தினமாகும். எழுத்தறிவு மனித முன்னேற்றத்திற்கு மிக அவசியமாகும். உலகின் பல நாடுகளில் எழுத்தறிவின்மை பெருகி வருவது குறித்து UNESCO அதிக அக்கறை எடுத்து வந்துள்ளது. ஒருபுறம் மக்கள் எழுத்தறிவு வாய்ப்புக்கள் இல்லாது காணப்படுகின்றனர். மறுபுறம் பல்வேறு காரணங்களால் மக்கள் எழுத்தறிவு பெறுவதில் அக்கறையின்றியுள்ளனர். மக்கள் எழுத்தறிவு பெறுவது அடிப்படை மனித உரிமையாகும். மேலும், அது சக்தி வாய்ந்தது. அரசியலில் பங்கேற்பதற்கும் ஜனநாயகத்தில் ஈடுபாடு கொள்வதற்கும் அது அத்தியாவசியமானதாகும்.





எழுத்தறிவும் மக்களாட்சியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றன. இதனாலேயே சர்வதேச கல்வி மாநாடுகளில் எல்லாம் எழுத்தறிவூட்டலுக்கு அதிக அக்கறை காட்டப்பட்டுள்ளது.

பெல்கிரேட்டில் நடைபெற்ற UNESCO 21 ஆவது மாநாட்டில் எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கு முன்னுரிமை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. எழுத்தறிவு நடவடிக்கைகளில் மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டவேண்டும் என்பதற்காக செப்டெம்பர் 8 ஆம் திகதி சர்வதேச எழுத்தறிவு தினமாக பிரகடனம் செய்யப்பட்டது. 1990 இல் சர்வதேச எழுத்தறிவு ஆண்டு அனுஷ்டிக்கப்பட்டது.



UNESCO இன் 10 ஆவது பொதுப்பேரவைக் கூட்டத்தில் எழுத்தறிவற்றோர் பற்றிக் குறிப்பிடும்போது, 'ஒருவர் தமது அன்றாட வாழ்வு தொடர்பான உண்மைகள் பற்றிய சுருக்கமான, எளிய உரையைப் புரிந்துகொள்ளவும், எழுதவும், படிக்கவும் இயலாதவராக இருப்பின் அவர் எழுத்தறிவில்லாதவராவார்.




பெரும்பாலான நாடுகளில் எழுத்தறிவற்றவர் வீதம் பெண்களிடையே அதிகம் காணப்படுகின்றது. எழுத்தறிவு என்பது நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. உதாரணமாக, பிரித்தானியாவில் 9 வயது குழந்தையின் கல்வி மட்டத்திற்கும் குறைவானவர்கள் எழுத்தறிவற்றவர்கள். கியூபெக்கில் 5 ஆம் வகுப்புக்கு குறைவாகப் படித்தவர்கள் எழுத்தறிவற்றவர்கள். அமெரிக்காவில் 1970 இல் 16 வயதுக்கு மேற்பட்ட 1.85 கோடி மக்கள் செயன்முறை எழுத்தறிவில்லாதவர்களாக இருந்தனர். தினசரியை வாசிக்கவும் அதன் உள்ளடக்கம் பற்றிய வினாக்களுக்கு விடையளிக்கவும் தொலைபேசித் தகவல் தொகுப்பு பயன்படுத்தவும் வேலை விண்ணப்பங்கள், சமூகப் பாதுகாப்பு விண்ணப்பங்கள், வங்கிக் கணக்குப் படிவங்கள் ஆகியவற்றைச் சரியாக நிரப்பவும் காசோலையை எழுதவும் நேர அட்டவணையைப் படித்துப் புரிந்து கொள்ளவும் முடியாதவர்களாக அவர்கள் இருந்தனர்.

1980 இல் உலகில் 82.4 கோடி மக்கள் எழுத்தறிவற்றவர்களாக இருந்தனர். இத்தொகையானது வயது வந்தோரில் 29 சதவீதமாகும். அண்மைக்கால கணக்கெடுப்பின் படி, 94.8 கோடி வயது வந்தவர்கள் உலகில் எழுத்தறிவு அற்றவர்களாக உள்ளனர். எழுத்தறிவற்றோர் தொகை ஒப்பீட்டளவில் மூன்றாம் உலக நாடுகளில் அதிகமாகும். சுமார் 80 சதவீதமான மக்கள் எழுத்தறிவற்றவர்களாவர்.

அத்துடன், எழுத்தறிவின்மைக்குப் பல காரணங்கள் அடிப்படையாகக் காணப்படுகின்றன. அவை மக்கள் தொகை பெருக்கம், அதனால் குறைந்த வாழ்க்கை வசதிகள், கல்வியில் அக்கறையின்மை, சிறுவர் பள்ளி செல்லாமை, இடைவிலகல், போர்ச்சூழல், வறுமை, அகதிமுகாம் வாழ்க்கை, நாடோடி வாழ்க்கை என்பனவாகும். 90 கோடி மக்கள் எழுத்தறிவற்றவர்களாக இருக்க, 43 பேருக்கு ஒரு இராணுவ வீரர் என்ற அடிப்படையில் பாதுகாப்பு, போர் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.



எழுத்தறிவு என்பது ஒரு தனிமனித தேவை மட்டுமன்று; அது வளர்முக நாடுகளின் அரசியல், சமூக, பொருளாதார, தொழில்நுட்ப விடுதலைக்கும் அத்திவாரமாகும். பண்பாட்டு உறுதிக்கும் அடிப்படையாகும். எழுத்தறிவுத் திறனைப் பெறுவதால் மட்டுமே ஒருவர் தமது பண்பாட்டின் முழு செயல் திறன்மிக்க உறுப்பினராக முடியும். முழு வளர்ச்சி பெற்ற குடிமகனாக முடியும். எனவே, எழுத்தறிவின்மையை ஒழித்தல் என்பது சர்வதேச சமுதாயத்தின் தார்மீகக் கடப்பாடாகும்.

**எம்.ஆர்.எஃப்.ஸைனியா**

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3753
எம்.அஹ்னஃப், தரம் - $1^{B}$, அல்-மனார் ம.கல்., கல்முனை.


அங்.இல: 3754
சரிபா, தரம் - $7^{I}$, பரி.அந்திரேயர் ம.வித்., நாவலப்பிட்டி.


அங்.இல: 3755
யூஸுப் ரைஹான், தரம் - $2^{B}$, மின்ஹாஜ் தே.பாட., திக்குவல்லை.


அங்.இல: 3756
ர.ஜோகினி, தரம் - $7^{B}$, வே.ம.உ.பாட., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3757
க.சதீஸ்குமார், தரம் - 10, மாதம்பை இல.01 த.வித்., இறக்குவானை.


அங்.இல: 3758
ரெஷோன் கோமஸ், தரம் - $6^{I}$, சென்.பீற்றர்ஸ் கல்., கொழும்பு-04.


அங்.இல: 3759
ம.ஜனகன், தரம் - $6^{F}$, யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3760
ரா.கீர்த்தனா, உயர் தரம் (வர்த்தகம்), இந்துக் கல்., கம்பளை.


அங்.இல: 3761
எம்.பஸ்ரிஸ், தரம் - $8^{D}$, அல்-ஹுமைஸரா தே.பாட., பேருவளை.


அங்.இல: 3762
ஸ்ரீ.கோபிதன், தரம் - $9^{B}$, புனித ஜோன்ஸ் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3763
க.ஹீர்த்திகன், தரம் - $9^{A}$, வவுனியா ம.வித்., வவுனியா.


அங்.இல: 3764
எம்.சஹிருல்லாஹ், தரம் - $10^{B}$, ஹமீதியா கல்., உக்குவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மனித உருவங்களை வரைய முன் உறுப்புக்களின் அளவுகள் பற்றி ஓர் அடிப்படை அறிவு அவசியமாகும். இவ்விதழில் மனித முகம் வரைவது எப்படி எனப் பார்ப்போம்.**


பொதுவாக, மனிதனின் முகம் வட்டமானது. பெண்ணின் முகத்தை வரையும் போது, அது கோளத்தன்மையுடன் அமைவது மிகவும் முக்கியமானது.

## முகம் வரைவது எப்படி?

- முதலில் வட்டமொன்றை வரையுங்கள். அதை மூன்று பகுதிகளாகப் பிரிக்கவும்.
- 1 ஆம் பகுதி நெற்றியும் முடியும் (தலைமயிர்) அமையும் பகுதியாகும்.
- 2 ஆம் பகுதி கண்கள், காதுகள், மூக்கு இடம்பெறும் பகுதியாகும்.
- 3 ஆம் பகுதி வாய் இடம்பெறும் பகுதியாகும்.

**தரப்பட்டுள்ள விளக்கப்படத்தின்படி;**

- A - வட்டமொன்றை வரைவோம்.
- B - அதை இரு பகுதிகளாகப் பிரித்து, பின்னர் படம் C இல் காட்டியவாறு மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளுங்கள்.
- முகத்தில் கண்களை வரையும் போது, கண்களுக்கு இடையே இருக்க வேண்டிய இடைவெளி நாம் வரையும் கண்களின் அளவாகும்.
- 2 ஆம் பகுதியில் மூக்கு அமைந்திருக்கும் பகுதியை அவதானியுங்கள். காது அமைந்திருப்பது மூக்கின் உயரத்திற்கு சமமாகும்.
- மூன்றாம் பகுதியில் மூக்கு வரையப்பட்டுள்ள ரேகையின்கீழ் படத்தில் காட்டியவாறு இரண்டு புள்ளிகளை அடையாளமிட்டு, இரண்டு புள்ளிகளையும் இணைப்பதன் மூலம் அமையும் பகுதி வாயின்மேல் (உதடு) பகுதி என நினைத்துக்கொள்ளுங்கள். கீழ் உதட்டை படத்தில் காட்டியவாறு வரையுங்கள்.
- முன்பக்கப்பார்வை, பக்கப்பார்வை போன்றவற்றைக் குறித்துள்ள படங்களில் வரையப்பட்டுள்ள முறைகளை அவதானித்து, பயிற்சி பெறுங்கள்.







அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




ஹதீகா ஸனானிஸ்,
தரம் - 1B, அல்-மனார் மத்.கல்.,
மருதமுனை-02.



எம்.அதீஃப், தரம் - 5A,
நூராணியா மு.ம.வித்.,
உயன்வத்த.



எம்.இஃப்றாஸ், தரம் - 9A,
அல்-ஃபலாஹ் மு.வித்.,
நீர்கொழும்பு.




எஸ்.ஹஸ்னா, தரம் - 7B,
இக்ரா மு.ம.வித்., உலப்பனை.




ஆன் சிந்துஜா, தரம் - 10,
திருக்குடும்பக் கன்னியர் மடம்.,
யாழ்ப்பாணம்.



சதிஸ் அரவிந்த், தரம் - 8,
வடிவாம்பிகா த.ம.வித்., சிலாபம்.



எம்.ரிமாஸா, தரம் - 11,
பாதினாவல மு.வித்., பாதினாவல.



ஜே.றிப்னாஸ், தரம் - 6C,
அல்-ஹம்றா ம.வித்., தோப்பூர்-03.




என்.பிரதீப், தரம் - 8B,
ரணபிம ரோயல் கல்., பேராதனை.



நவீட் ஷகி, தரம் - 4B,
ஒக்ஸ்ஃபோர்ட் ச.பாட., பதுளை.



ஜே.நவதர்ஷினி,
தரம் - 3, நயாபான த.வித்.,
புஸ்ஸல்லாவ.



எஃப்.முபஷ்ஷிரா, தரம் - 7B,
முஸ்லிம் ம.மத்.கல்., தர்கா நகர்.



திக்குவல்லையைச் சேர்ந்த அஹமட் ரஸ்மி-சுமையா தம்பதியரின் செல்வப் புதல்வன் அஹமட் ரஷாட், 05.09.2010 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா' த.பெ.என் 2037 கொழும்பு

திக்குவல்லையைச் சேர்ந்த ரிப்னாஸ்-மிஸ்னா தம்பதியரின் செல்வப் புதல்வன் ரஷாட் அஹமட், 08.09.2010 (இன்று) தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



*(தகவல் : ஹஸ்னா)*



யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த யூலன்றாஜ்-நிமலதர்ஷினி தம்பதியரின் செல்வப் புதல்வன் நிரோன், 11.09.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறையாசி பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஊரில் ஒரு சோம்பேறி இருந்தான். அவன் பெயர் சோமன். பெற்றோர் சேர்த்து வைத்த சொத்தை நாள்தோறும் செலவழித்து வாழ்க்கையை நடத்தினான். ஒரு சிறு வேலைகூட செய்யமாட்டான். சோம்பேறியாக இருந்து செலவு செய்த சொத்து சில வருடங்களிலேயே தீர்ந்துவிட்டது. இதனால், சோமன் பரம ஏழையாகிவிட்டான். எங்காவது போய் வேலை பார்த்து பணம் சம்பாதித்து வரும்படி சோமனின் மனைவி கூறினாள்.

சோமன் அரண்மனைக்கு போய் அரசரை வணங்கி, ''நான் ஓர் ஏழை. தங்களால் முடிந்ததை எனக்குப் பிச்சையாகத் தாருங்கள்'' என்று வேண்டினான்.

அரசனும் ''உனக்குப் பரிசாக பொன்னையும் வைரத்தையும் தரச் சொல்கிறேன். அதை வைத்துப் பிழைத்துக்கொள். புத்திசாலித்தனமாக நடந்துகொள்'' என்றார். ''நம் ஊரில் சிவன் கோவிலுக்குப் அருகில் உள்ள ஏக்கர் நிலத்தை இந்த ஏழைக்கு எனது தானமாக எழுதிக்கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்று மந்திரிக்குக் கட்டளையிட்டார் அரசர். இதனால், சோமன் திடுக்கிட்டான். பொன்னும் வைரமும் தருவதாகக் கூறிவிட்டு, வெறும் நிலத்தைத் தருவதாகச் சொல்கிறாரே? இது என்ன நியாயம்?'' என்று நினைத்தான்.

இதை அரசரிடம் எப்படிக் கேட்பது என்று அஞ்சினான். வாயை மூடிக்கொண்டு பேசாமல் வீடு வந்து சேர்ந்தான். தன் மனைவியி



# உழைப்பின் உயர்வு

டம் இதைக் கூறினான். சோமனின் மனைவி வள்ளியோ மிகவும் புத்திசாலி. உடனே அரசர் கூறியதில் அர்த்தம் இருப்பதை உணர்ந்து கொண்டாள். ''பேசாமல் என்னுடன் வாருங்கள். நாம் போய் அரசர் நமக்குத் தந்த நிலத்தைப் பார்த்துவிட்டு வரலாம். அரசர் சொன்ன பொன்னும் வைரமும் நிலத்தில்தான் இருக்கும்'' என்றாள். இருவரும் அரசர் கொடுத்த நிலத்திற்குச் சென்றனர்.

வள்ளி கணவனிடம், ''என்னங்க! இந்த நிலத்திற்குள் பொன்னையும் வைரத்தையும் அரசர் புதைத்து வைத்திருக்கலாம். அதனால் தான் பொன்னும் வைரமும் தருகிறேன் என்று கூறிவிட்டு இந்த நிலத்தைத் தந்திருக்கிறார். இந்த நிலத்தை ஆழமாகத் தோண்டிப் பார்த்தால் உள்ளே பொன்னும் வைரமும் இருக்கலாம்'' என்றாள். உடனே வேலையைத் துவங்கிவிட்டான் சோமன். இரவு பகலாகத் தோண்டினான். எவ்வளவு ஆழமாகத் தோண்டியும் ஒரு பலனும் இல்லை. களைப்படைந்த சோமன் மிகவும் வேதனை அடைந்தான். வள்ளி அவனைச் சமாதானம் செய்தாள். பின் ஒரு மூட்டை துவரை விதையைக்கொண்டு வந்து, ''இந்தத் துவரையை இந்த நிலத்தில் விதைத்துவிடுங்கள். இது வேர் விட்டு முளைக்கும். மண்ணுக்குள் ஆழமாகப் பதிந்துவிடும். உடனே மண்ணுக்குள் புதைந்துள்ள பொன்னும் வைரமும் இந்த வேரோடு ஒட்டிக்கொள்ளும். செடி நன்றாக வளர்ந்ததும் வேரோடு அவற்றைப் பறித்து விடுவோம். பின்பு வேரில் ஒட்டியுள்ள பொன்னும் வைரமும் நமக்குக் கிடைக்கும்'' என்றாள்.

முட்டாள் சோமன் அதையும் நம்பினான். ஒரு மூட்டை துவரையை அந்த நிலத்தில் தூவினான். அது முளைக்க தினமும் நீர் விடும்படி அவன் மனைவி கூறினாள். அவனும் வள்ளி சொன்னபடி செய்தான். நாட்கள் சென்றன. செடிகள் பெரிதாகி வளர்ந்தன. ஒரு வழியாக துவரை முளைத்து நன்றாக முற்றியது. ''இந்தச் செடியை ஒன்றும் செய்யவேண்டாம். செடி மேல் ஒட்டியுள்ள கதிரை எடுத்து உதிர்த்துப் பாருங்கள். அதில்தான் பொன்னும் வைரமும் உள்ளது'' என்றாள்.

இருவரும் கதிர்களைப் பறித்து சாக்குகளில் போட்டுக் கட்டினர். வீட்டிற்கு அந்த மூட்டைகளை எடுத்து வந்து உதிர்த்தனர். சோமனுக்கு எதுவுமே புரியவில்லை. வள்ளி மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. அறுவடை செய்த துவரையை விற்றுப் பணமாக்கினாள். ஆயிரக்கணக்கான ரூபா பணம் கிடைத்தது. சோமன் கையில் பணத்தைக் கொடுத்தாள். அப்போதுதான் சோமனுக்கு உழைப்பின் மகிமை புரிந்தது. இனிமேல் உழைத்து வாழ்வது என்று சோமன் தீர்மானித்துக் கொண்டான்.



# கருந்தலைக் காகமும் கனேரிப் பறவையும் 01

அக்கருந்தலைக் காகம் பிர்ச் மரத்தின் மேல் உட்கார்ந்து அதன் கிளையை தன் அலகால் டொக்-டொக் என்று இடித்தது. அலகைச் சுத்தம் செய்துகொண்ட பின் சுற்றுமுற்றும் தன் பார்வையைச் செலுத்தி, ''கா.... கா!'' என்று கத்திற்று. வேலி மேல் உட்கார்ந்து தூங்கி வழிந்து கொண்டிருந்த பூனை வாஸ்கா இதைக்கேட்டு அச்சத்தால் உருண்டு கீழே விழுந்தது. ''உன்னைச் சைத்தான் கொண்டு போக, கருந்தலைப் பீடையே... உனக்குத்தான் என்ன குரலைக் கொடுத்திருக்கிறான் ஆண்டவன்!'' என்று சிடுசிடுக்கத் தொடங்கியது பூனை.

''அட சும்மா கிட சோம்பேறிப் பூனையே. உன்னுடன் கதைக்க எனக்கு இப்போது நேரமில்லை''

''பாவம் ரொம்பத்தான் உழைத்துக் களைத்துப்போய் விட்டாய்'' என்று கேலி செய்தது. பூனை வாஸ்கா.

''வாயை மூடு, சோம்பேறி... நீ ஓயாமல் படுத்துக் கிடக்கிறாய். வெயில் காய்வது ஒன்றுதான் உனக்குத் தெரிந்தது. எனக்கோ, காலை முதல் மாலை வரை நிம்மதியே கிடையாது. எத்தனை கூரைகளில் உட்கார்ந்துவிட்டேன். பாதி ஊரைச் சுற்றிப் பறந்தேன். எல்லா மூலை முடுக்குகளையும் பார்வையிட்டேன். இன்னும் மாதா கோயில் மணிக்கூண்டைப் பார்க்க வேண்டும். சந்தைக்குப் போய்வர வேண்டும். காய்கறித் தோட்டத்தைப் பார்க்க வேண்டும். அட எதற்காக நான் உன்னோடு வெட்டியாகப் பேசி நேரத்தைப் போக்குகிறேன். உன்னுடன் இருக்க எனக்கு நேரம் இல்லை''. காகம் பிர்ச் மரக் கிளையை அதன் அலகால் இடித்துவிட்டு, சிறகுகளை அடித்துப் பறக்க ஆயத்தமானது. அப்போது பயங்கரக் கூச்சல் ஒன்று அதன் காதில் கேட்டது. சிட்டுக்குருவிகளின் கூட்டம் ஒன்று பறந்து வந்தது. அவற்றிற்கு முன்னே சிறிய மஞ்சள் பறவை ஒன்று பறந்தது.

''தம்பிமாரே, பிடியுங்கள் ஐயோ பிடியுங்கள் அதை'' என்று கீச்சிட்டன சிட்டுக் குருவிகள்.

''என்ன அது? எங்கே?'' என்று கத்தி, சிட்டுக் குருவிகளைத் தொடர்ந்து பாய்ந்தது காகம். தனது சிறகுகளை ஒரு பத்துத் தரம் அடித்துக் குருவிக் கூட்டத்தை எட்டிப் பிடித்தது காகம். மஞ்சள் பறவையின் வலு எல்லாம் தீர்ந்து விடவே, பவளக்குறிஞ்சி, களா, காட்டுச் சொரி முதலிய செடிகள் அடர்ந்த சிறு தோட்டத்தில் தட்டுத்தடுமாறி இறங்கிற்று. தன்னை விரட்டிக் கொண்டு வந்த சிட்டுக்குருவிகளிடமிருந்து மறைந்து கொள்ளப் பார்த்தது. ஆனால், அது செடிக்கடியில் ஒளிவதைக் காகம் கண்டுவிட்டது. ''யார் நீ?'' என்று கோபத்துடன் கரைந்தது காகம். அப்போது குத்துப் பட்டாணிக் கடலை சிதறியது போலச் சிட்டுக் குருவிகள் மஞ்சள் பறவை இருந்த செடியைச் சூழ்ந்து மொய்த்தன.

''எதற்காக நீங்கள் இதைத் துன்பப் படுத்துகிறீர்கள்?'' என்று கேட்டது காகம்.

''இது எதற்காக மஞ்சளாக இருக்கிறது?'' என்று

## மஞ்சள் பறவை கூறிய தகவல்



எல்லாக் குருவிகளும் ஒன்றாகக் கீச்சிட்டன.

காகம் மஞ்சள் பறவையைப் பார்வையிட்டது. பறவை மெய்யாகவே ஒரே மஞ்சளாக இருந்தது. காகம் தலையை ஆட்டி, ''அட குறும்புக்காரக் குருவிகளா... இது பறவையே இல்லையே! இந்த மாதிரிப் பறவைகள் எங்காவது உண்டா? அது கிடக்கிறது. நீங்கள் கிளம்புங்கள் இங்கிருந்து இந்த விந்தைப் பிறவியோடு நான் ஒருதரம் பேசியே ஆகவேண்டும். இது பறவையாக வெறுமே நடிக்கிறது'' என்றது. குருவிகள் கீச்சிட்டன. கிரீச் என்று கத்தின. முன்னரை விடக் கடுமையாக ஆத்திரப்பட்டன. ஆனாலும், அவற்றால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவை போக வேண்டியதாயிற்று. காகம் நீண்ட பேச்சுக்கு இடம் கொடுக்காது சிடுசிடுத்தது.

சிட்டுக்குருவிகளை விரட்டிய பின்னர் காகம் மஞ்சள் பறவையை விசாரிக்கத் தொடங்கிற்று. மஞ்சள் பறவையோ, மூச்சு இரைக்க, சின்னக் கரு விழிகளால் பரிதாபமாக காகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது.

''யார் நீ?'' என்று கேட்டது காகம்.

''நான் கனேரிப் பறவை...''

''இதோ பார். என்னை ஏமாற்றாதே. ஏமாற்றினால் உனக்குப் பிரச்சினைதான். நான் மட்டும் இல்லாவிட்டால் குருவிகள் உன்னைக் கொத்திக் குதறி இருக்கும்...''

''உண்மையிலேயே நான் கனேரிப் பறவைதான்...''

''நீ எங்கிருந்து வருகிறாய்?''

''நான் ஒரு கூண்டில் வசித்தேன். அக்கூண்டில்தான் பிறந்தேன். வளர்ந்தேன். வாழ்ந்து வந்தேன். மற்றப் பறவைகள் மாதிரிப் பறக்க எனக்கு ஒரே ஆசையாக இருந்தது. கூண்டின் ஜன்னல் வழியே நான் மற்றப் பறவைகளை ஓயாமல் பார்த்துக் கொண்டிருப்பேன். அவை ஒரே குதூகலமாக இருந்தன. கூண்டிலோ, நெரிசலாக இருந்தது. சின்னப் பெண் அலியோனுஷ்கா நீர்க் கோப்பையோடு வந்து கூண்டைத் திறந்தாள். அந்த நேரம் பார்த்து நான் விர்ரென்று வெளியே பாய்ந்தேன். கொஞ்ச நேரம் அறையில் பறந்து கொண்டிருந்தேன். பிறகு பலகணித் திறப்பு வழியாக வெளியே வந்துவிட்டேன்'' என்றது அந்தப் பறவை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்திலும் அம்மா, மாலா, சீதா, தோழிமார் ஆகியோருக்கிடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

මිතුරියෝ: සීතා, අපි දැන් කෑවා. විනෝදවුණා. දැන් අපි යන්න ඕනේ.
சீதா, அபி தென் கேவா. வினோதவுனா. தென் அபி யன்ன ஒனே.
தோழிமார்: சீதா, இப்போது நாங்கள் சாப்பிட்டோம். சந்தோஷப்பட்டோம். இனி நாங்கள் போக வேண்டும்.

සීතා: අනේ තව ටිකක් වෙලා ඉන්නකෝ. තවම හතරයිනේ වෙලාව.
அனே தவ டிகக் வெலா இன்னகோ. தவம ஹதரய்னே வெலாவ.
சீதா: ஐயோ இன்னும் கொஞ்சநேரம் இருங்களேன். இப்போதுதானே நான்கு மணி.

මිතුරියෝ: බැහැ සීතා. අපි දුර යන්නත් ඕනේ.
பெஹே சீதா. அபி துற யன்னத் ஒனே.
தோழிமார்: முடியாது சீதா. நாங்கள் வெகுதூரம் போக வேண்டும்.

සීතා: එහෙනම් මාලා ඔයයි නංගියි තව ටිකක් ඉන්න.
எஹெனம் மாலா ஒயய் நங்கிய் தவ டிகக் இன்ன.
சீதா: அப்போது மாலா நீங்களும் தங்கையும் கொஞ்சநேரம் இருங்கள்.

මිතුරියෝ: ඒක හොඳයි. මාලාට ළඟයිනේ.
ஏக ஹொந்தய். மாலாட லங்கய்னே.
தோழிமார்: அது நல்லது. மாலாவுக்கு அருகில்தானே.

මාලා: එහෙනම් නංගි අපි තව ටිකක් වෙලා ඉමුද?
எஹெனம் நங்கி அபி தவ டிகக் வெலா இமுத?
மாலா: அப்படியென்றால் தங்கை நாங்கள் இன்னும் கொஞ்சநேரம் இருப்போமா?

නංගි හා අක්කේ. අපි පහට විතර යමු.
ஹா அக்கே. அபி பஹட விதற யமு.
தங்கை: சரி அக்கா. நாங்கள் ஐந்து மணியளவில் போவோம்.

සීතා: හොඳ නංගි.
ஹொந்த நங்கி.
சீதா: நல்ல தங்கை.

මිතුරියෝ: එහෙනම් අපි යන්නම්. අම්මා කෝ?
எஹெனம் அபி யன்னம். அம்மா கோ?
தோழிமார்: அப்படியென்றால் நாங்கள் போகின்றோம். அம்மா எங்கே?

සීතා: අම්මේ මෙයාලා යන්න යනවා.
அம்மே மெயாலா யன்ன யனவா.
சீதா: அம்மா இவர்கள் போகப் போகிறார்கள்.



මිතුරියෝ: අපි ගිහින් එන්නම් අම්මේ.
அபி கிஹின் என்னம் அம்மே.
தோழிமார்: நாங்கள் போய் வருகிறோம் அம்மா.
සීතා ඔයාට ගොඩක් ස්තුතියි.
சீதா ஒயாட கொடக் ஸ்தூதிய்.
சீதா உங்களுக்கு மிக்க நன்றி.

අම්මා: හොඳයි ගිහින් එන්න. දෙවි පිහිටයි.
ஹொந்தய் கிஹின் என்ன. தெவி பிஹிடய்.
அம்மா: நல்லது போய்வாருங்கள். கடவுள் துணை.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* சீதா, நாங்கள் போக வேண்டும்.
සීතා, අපි යන්න ඕනේ.

i. இன்னும் கொஞ்சநேரம் இருங்களேன். இப்போதுதானே நான்கு மணி.
..........................................................................

ii. மாலா நீங்களும் தங்கையும் இருங்கள்.
..........................................................................

iii. நல்லது போய்வாருங்கள்.
..........................................................................






நிகழ்கால வினைமுற்று வாக்கியத்தை (Present Perfect Tense) இறந்தகால தனி வாக்கியத்துடன் (Past Simple Tense) ஒப்பிட்டுப் பயிலுதல். மேலும் உதாரணங்கள் இங்கே;

(அ) Your brother found a pen yesterday.
உனது சகோதரன் நேற்று பேனா ஒன்றைக் கண்டெடுத்தான்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

✱ Your brother <u>found.</u> <u>(Simple Verb)</u>
உனது சகோதரன் <u>கண்டெடுத்தான்.</u> <u>(தனி வினைச்சொல்)</u>

(ஆ) Your brother has just found a pen.
உனது சகோதரன் தற்போதுதான் பேனா ஒன்றைக் கண்டெடுத்துள்ளான்.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் - Present Perfect Tense)

✱ Your brother <u>has</u> <u>found.</u> <u>(Compound Verb)</u>
உனது சகோதரன் <u>கண்டெடுத்துள்ளான்.</u> <u>(கூட்டு வினைச்சொல்)</u>

(இ) Your sister lost the door-key yesterday.
உனது சகோதரி கதவுத்திறப்பை நேற்றுத் தொலைத்தாள்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

✱ Your sister <u>lost.</u> <u>(Simple Verb)</u>
உனது சகோதரி <u>தொலைத்தாள்.</u> <u>(தனி வினைச்சொல்)</u>

(ஈ) Your sister has just lost the door-key.
உனது சகோதரி தற்போதுதான் கதவுத்திறப்பை தொலைத்துள்ளாள்.

✱ Your sister <u>has</u> <u>lost.</u> <u>(Compound Verb)</u>
உனது சகோதரி <u>தொலைத்துள்ளாள்.</u> <u>(கூட்டு வினைச்சொல்)</u>

(உ) Our dog jumped out of the wall yesterday.
எங்கள் நாய் நேற்று சுவரின் வெளியே பாய்ந்தது.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

✱ Our dog <u>jumped.</u> <u>(Simple Verb)</u>
எங்கள் நாய் <u>பாய்ந்தது.</u> <u>(தனி வினைச்சொல்)</u>

(ஊ) Our dog has just jumped out of the wall.
எங்கள் நாய் தற்போதுதான் சுவரின் வெளியே பாய்ந்துள்ளது.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் - Present Perfect Tense)

✱ Our dog <u>has</u> <u>jumped.</u> <u>(Compound Verb)</u>
எங்கள் நாய் <u>பாய்ந்துள்ளது.</u> <u>(கூட்டு வினைச்சொல்)</u>

(எ) I made a mistake.
நான் தவறு ஒன்றைச் செய்தேன்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

✱ I <u>made.</u> <u>(Simple Verb)</u>
நான் <u>செய்தேன்.</u> <u>(தனி வினைச்சொல்)</u>

(ஏ) I have made a mistake.
நான் தவறு ஒன்றைச் செய்துவிட்டேன்.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் - Present Perfect Tense)

✱ I <u>have</u> <u>made.</u> <u>(Compound Verb)</u>
நான் <u>செய்துவிட்டேன்.</u> <u>(கூட்டு வினைச்சொல்)</u>

**குறிப்பு:** மேற்படி வாக்கியத்தின்படி, 'made' என்பதற்கு **'செய்தேன்'** எனவும் **'have made'** என்பதற்கு **'செய்துவிட்டேன்'** எனவும் அர்த்தம் கொள்ளலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலக அறிவை வளர்த்துக் கொள்வோம்...!




* சர்வதேச மகளிர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
  *மார்ச் 8*



* உலகின் முதலாவது பெண் ஜனாதிபதி யார்?
  *மரியா இஸபெல் (ஆர்ஜன்டீனா)*



* உலகின் முதலாவது பெண் பிரதமர்?
  *சிரிமாவோ பண்டாரநாயக்க*



* இலங்கையின் முதலாவது பெண் நாடாளுமன்ற உறுப்பினர்?
  *ஃப்ளோரன்ஸ் சேனநாயக்க*
* இலங்கையின் முதலாவது பெண் அமைச்சர் யார்?
  *விமலா விஜயவர்தன*



* அமெரிக்காவின் தற்போதைய வெளியுறவு அமைச்சர்?
  *ஹிலரி கிளின்டன்*



* ஒலிம்பிக் விளையாட்டுக்களில் இலங்கை சார்பாக பதக்கம் ஒன்றை வென்ற முதல் பெண் யார்?
  *சுசந்திகா ஜயசிங்ஹ*



* இலங்கையில் அனல் மின்நிலையம் எங்கு அமைக்கப்பட்டு வருகின்றது?
  *நுரைச்சோலை*



* விக்டோரியா நீர்மின் திட்டத்திற்கு நிதியுதவி புரிந்த நாடு எது?
  *பிரிட்டன்*



* பிரான்ஸ் புரட்சி ஏற்பட்ட வருடம்?
  *கி.பி 1789*



* ரஷ்ய புரட்சி ஏற்பட்ட வருடம்?
  *கி.பி 1971*



* இலங்கை ஒரு குடியரசு நாடாக அமையப்பெற்ற வருடம், திகதி?
  *1972 மே மாதம் 22*
* இலங்கையில் தனிநபரின் மாதாந்த சராசரி வருமானம்?
  *(2006/2007 வருடத்தில்)*
  *மாதத்திற்கு ரு.26,286*



* இலங்கையில் நடுத்தர, இடைநிலை வருமான வர்க்கத்தைச் சேர்ந்தவரின் தனிநபர் வருமானம்?
  *(2006/2007 வருடத்தில்)*
  *மாதத்திற்கு ரு.16,735*
* எலின் ஜொன்ஸன் என்ற பெண்மணி எந்த நாட்டின் ஜனாதிபதி ஆவார்?
  *லைபீரியா*



* விண்வெளிக்கு முதன்முதலாகப் பயணம் செய்த பெண் யார்?
  *வெலண்டினா தெரஸ்கோவா*



* ஆங்கிலப் புரட்சி எந்த வருடத்தில் ஏற்பட்டது?
  *கி.பி 1688*

## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# "ஈராக்கில் பணிகள் முடிந்துவிட்டன"

## - ஒபாமா



ஈராக்கில் தமது இராணுவ நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு விட்டதாக அமெரிக்க மக்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார் ஜனாதிபதி பராக் ஒபாமா.

ஈராக்கில் சதாம் ஹுசேய்னின் ஆட்சிக்காலத்தின்போது, ஈராக்கில் நச்சு ஆயுதங்கள் இருப்பதாகவும் அவற்றை அழிப்பதாகவும் கூறி அந்நாளைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷினால் ஈராக்கிற்கு அமெரிக்க படைகள் அனுப்பப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து வந்த தேர்தலில் போட்டியிட்ட ஒபாமா, தான் வெற்றி பெற்றால் ஈராக்கிலுள்ள அமெரிக்க படைகளை மீள அழைப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார். அதற்கமையவே, தற்போது ஈராக்கிலுள்ள அமெரிக்க படைகள் மீள அழைக்கப்பட்டுள்ளன.

2006 ஆம், 2007 ஆம் ஆண்டுகளின் பின்னர் ஈராக்கில் வன்முறைகள் கணிசமான அளவில் குறைந்துள்ளதாக கூறப்படுகின்றபோதிலும் தற்கொலைத் தாக்குதல் சம்பவங்கள் அங்கு தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

# அவுஸ்திரேலிய தேர்தலில் ஆதிவாசியும் வெற்றி!



கடந்த மாதம் 21 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவுஸ்திரேலிய வரலாற்றில் முதல் தடவையாக ஆதிவாசி நபர் ஒருவர் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார். இவரது பெயர் சென் வயட். வயது 58. மேற்கு அவுஸ்திரேலியாவின் ஹஸ்லக் என்ற தொகுதியிலேயே இவர் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளார்.

இருப்பினும், அநேகமான அவுஸ்திரேலிய வாக்காளர்கள் தாம் இந்த நபரை ஓர் ஆதிவாசி என்று அறியாமலேயே வாக்களித்ததாகவும் அவர் ஓர் ஆதிவாசி என்பதை முன்கூட்டியே அறிந்திருந்தால் அவருக்கு வாக்களித்திருக்க மாட்டோம் என்றும் தற்போது தெரிவித்துள்ளனர்.

## அற்லஸ் கேள்வி - 272

**கேள்வி: அவுஸ்திரேலிய தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஆதிவாசியின் பெயர் என்ன?**

**சரியான விடை..........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 272,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 270 இன் சரியான விடை: 40**

**பரிசு பெறுவோர்**

தியாகராஜா வின்சியா,
C/291, அருணோதய மாவத்தை,
ஒபேசேகரபுர, இராஜகிரிய.

அரசு கௌசிகா,
331/1, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.

எம்.மொஹமட் அக்ரம்,
47/53, ஜே.பி லேன், புத்தளம்.

# எரிமலை வெடிப்பு...!

**இந்தோனேஷியாவில் 'சினாபெங்க்' என்ற எரிமலை வெடித்ததனால் அதன் அருகாமைக் கிராமங்களில் வசித்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடி நகர்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

**இந்த எரிமலை வெடித்ததில் ஏற்பட்ட சாம்பல் புகை 1,500 மீற்றர் தொலைவு வரை பரவியதாகவும் தெரியவருகின்றது. சுமாத்ரா தீவுகளிலிருந்து வடக்கே 8,100 அடி உயரத்திலேயே மேற்படி எரிமலை காணப்படுகின்றமையும் 400 வருடங்களின் பின்னரே இது வெடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டம்...?



இங்கிலாந்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக வெளியாகியுள்ள தகவல்கள் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்திடம் வலியவே தோல்வி அடைவதற்காக லஞ்சம் பெற்றார்கள் என்ற ரீதியிலேயே பாகிஸ்தான் அணியின் வீரர்கள் சிலர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வதற்காக பாகிஸ்தானின் சிறப்புப் புலனாய்வுக் குழுவொன்று லண்டனுக்குச் சென்றுள்ளது.

பாகிஸ்தான் அணியின் தலைவர் சல்மன்பட் உட்பட, ஏழு வீரர்களுக்கு இந்த சூதாட்டத்தில் தொடர்பு இருப்பதாக கூறப்படுகின்றது. மொஹமட் அமிர், மொஹமட் அசிப், கம்ரன் அக்மல் ஆகியோரும் இதில் அடக்கம்.

இந்த சூதாட்டத்தின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படுகின்ற மஜித் என்பவரை லண்டன் பொலிஸார் கைது செய்ததையடுத்தே அவர் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வீரர்களிடம் ஸ்கொட்லாந்துப் பொலிஸார் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.



பாகிஸ்தான் வீரர்கள் குற்றமிழைத்திருப்பதாக உறுதி செய்யப்பட்டால் அவர்களுக்கு ஆயுட்கால கிரிக்கெட் தடை விதிக்கப்படலாம் என்றும் கருதப்படுகின்றது.

இதேவேளை, மேற்படி குற்றச்சாட்டுக்களை பாகிஸ்தான் அணியின் தலைவர் சல்மன்பட் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார். வீரர்கள் அனைவரும் அணி உணர்வோடு நேர்மையுணர்வோடு போட்டிகளில் ஈடுபட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தினால் பாகிஸ்தான் கிரிக்கெட் துறைக்கு ஏற்பட்டிருந்த பின்னடைவுடன், தற்போதைய இந்த சூதாட்ட குற்றச்சாட்டும் சேர்ந்துள்ளமையால் பாகிஸ்தானின் கிரிக்கெட் துறையின் எழுச்சியைத் தடுப்பதற்கு மறைமுக சக்திகள் செயற்பாட்டு வருகின்றனவா? என்ற சந்தேகத்தையும் சில கிரிக்கெட் அபிமானிகள் எழுப்பியுள்ளனர்.

## கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்

**-இம்ரான்கான்**

**பாகிஸ்தான் வீரர்களில் எவராவது கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக உறுதி செய்யப்பட்டால் அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.**

**இவ்வாறு வழங்கப்படுகின்ற தண்டனையானது எதிர்கால இளம் வீரர்களுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக இருக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.**

**எனினும், தன்னைப் பொறுத்தளவில் இதனைத் தன்னால் நம்பமுடியாமல் இருப்பதாகவும் ஆனால், குற்றம் புரிந்தமை நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் என்ற நிலையில் தான் இருப்பதாகவும் இம்ரான்கான் குறிப்பிட்டுள்ளார்.**

## றகர் வீரருக்கு போட்டித் தடை...!



**தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பாவித்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட கண்டி ரக்பி கழகத்தின் வீரர் அநுரங்க வல்பொலவிற்கு ஒருவருட காலத்திற்குப் போட்டித்தடை விதிக்கப்பட்டதை விளையாட்டுத்துறை அபிமானிகள் வரவேற்றுள்ளனர்.**

**எதிர்காலத்தில் ஏனையவர்களும் இவ்வாறு தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துகளைப் பாவிப்பதை இது கட்டுப்படுத்தும் என்றும் விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.**

**மேற்படி, தடை விதிக்கப்பட்டுள்ள காலப்பருவத்திற்குள் எந்தவொரு ரகர் போட்டிகளிலும் அவர் கலந்து கொள்ளமுடியாது.**

**தான் உட்கொண்ட கேக்கிலேயே தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து கலக்கப்பட்டிருந்திருக்கலாம் என்று வல்பொல தெரிவித்துள்ளார். இருப்பினும், இவர் மாறுபட்ட விதத்தில் வெவ்வேறு விதமாக வாக்குமூலங்களை வழங்கியதால் அவர் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன், ஒருவருட போட்டித் தடையும் விதிக்கப்பட்டார்.**

**கண்டி கழகத்திற்கும் விமானப் படை அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியொன்றில் கலந்து கொண்டிருந்தபோதே, இவரின் சிறுநீர் மாதிரி பெறப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டதில் அவர் ஊக்க மருந்து பயன்படுத்தியிருப்பது தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.**

## ஆசிய கரையோர:

# வொலிபோல் போட்டியில் இலங்கைக்கு இரண்டாமிடம்

ஆசியக் கிண்ண கடற்கரையோர வொலிபோள் போட்டிகளில் இலங்கை அணி இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

சீனாவில் நடைபெற்ற மேற்படி போட்டிகளில் இறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணியும் இலங்கை அணியும் மோதியதில் 2-0 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணி வெற்றியீட்டியது.



இருப்பினும், இலங்கையின் கரையோர வொலிபோள் வரலாற்றில் இலங்கை அணி இறுதிப்போட்டி வரை முன்னேறியமை சிறப்பான அம்சமாகவே கருதப்படுகின்றது.

இப்போட்டிச் சுற்றுக்களில் ஈரானைத் தோற்கடித்து முன் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற இலங்கை அணி ஹொங்கொங் அணியை 2-0 என்று தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறி அரையிறுதியில் அவுஸ்திரேலியாவை 2-1 என்ற சுற்றுக்கணக்கில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

சீனாவை 2-0 என்ற சுற்றுக் கணக்கில் தோற்கடித்தே நியூஸிலாந்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. பதினொரு நாடுகளின் சார்பாக 20 அணிகள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## என்னைக் கவர்ந்த வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ்

*-முரளிதரன்*

டெஸ்ட் கிரிக்கெட்டில் தான் எட்டிய 800 விக்கெட் சாதனையை இந்திய அணியின் ஹர்பஜன் சிங் முறியடிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக இலங்கை அணியின் சாதனை வீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.





800 விக்கெட் சாதனை புரிந்தமைக்காக, முரளிதரனுக்கு ஐ.பி.எல் அணிகளில் ஒன்றான 'சென்னை சுப்பர் கிங்ஸ்' சார்பாக பாராட்டு விழா நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், இங்கு உரையாற்றிய முரளிதரன் தனது கிரிக்கெட் வரலாற்றில் மேற்கிந்திய வீரர் பிரயன் லாரா, இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கர் ஆகியோரின் விக்கெட்களை வீழ்த்தவே அதிக அளவில் சிரமப்பட்டிருப்பதாகவும் தன்னைக் கவர்ந்த வீரர் மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் வீரர் விவியன் ரிச்சட்ஸே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

டெஸ்ட்டிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஒருநாள் மற்றும் டுவென்டி டுவென்டி போட்டிகளில் தொடர்ந்தும் விளையாடுவதாகவும் தெரிவித்துள்ள முரளிதரன், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் மீதான சூதாட்ட குற்றச்சாட்டு தொடர்பாக கேட்கப்பட்டபோது, "இதுவரை அது குற்றச்சாட்டாகவே உள்ளது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் மட்டுமே அதுபற்றிக் கருத்துக் கூறமுடியும்" என்றும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூரியன் மறைந்து இருள் சூழும் வேளையில் வானில் முதன்முதல் தோன்றுவதும் இருள் நீங்கி சூரியோதயம் ஏற்படும் அதிகாலை வேளையில் வானில் இறுதியாக மறைவதுமாக ஒரு விண்மீன் இருப்பதை நாம் காண்கிறோம். ஏனைய நட்சத்திரங்களுடன் ஒப்பிடுகையில் அதிக பிரகாசமான ஒளியுடன் தோன்றும் அது உண்மையில் ஒரு நட்சத்திரமன்று; மாறாக புவியுடன் பல விடயங்களில் ஒத்த தன்மைகொண்ட வெள்ளிக்கிரகமே அது என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்**



# வெள்ளி: அறிந்ததும் அறியாததும்

## புவியை ஒத்த வெள்ளி

ஞாயிற்றுத் தொகுதியில் புதனுக்கும் புவிக்கும் இடையில் அமைந்துள்ள வெள்ளிக் கிரகமானது பரப்பளவு, சுற்றுகை போன்ற விடயங்களில் புவியுடன் மிக ஒத்த தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. சந்திரனைத் தவிர்த்து இரவில் வானில் மிகப் பிரகாசமான ஒளியுடன் காணப்படுவது இந்த வெள்ளிக்கிரகமே.

புராதன கிரேக்க நாகரிகத்தில் அன்பின் கடவுளாகக் கருதப்பட்ட 'வீனஸ்' தேவதையின் பெயரே இக்கிரகத்திற்கு சூட்டப்பட்டுள்ளது. சூரியனிடமிருந்து 672 லட்சம் மைல் தொலைவில் அமைந்துள்ள வெள்ளி, புவியில் இருந்து 260 லட்சம் மைல் தூரத்தில் அமைந்துள்ளது. பரப்பளவில் புவியுடன் மிக நெருங்கிய அளவைக்கொண்டுள்ள இக்கிரகமானது, சுமார் 7800 மைல் விட்டத்தைக் கொண்டுள்ளதோடு,புவியின் விட்டமோ 7927 மைல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வெள்ளி குறித்த ஆய்வு

மிக நீண்ட காலமாகவே வெள்ளிக்கிரகம் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் அதன் தரை அமைப்பு, மேற்பரப்பு மற்றும் ஏனைய அம்சங்கள் எத்தகையது என்பதை விஞ்ஞானிகளால் பெரிதும் அனுமாணிக்க முடியவில்லை. வெள்ளிக்கிரகத்தைச் சுற்றி கனமான வளிமண்டலம் மூடி இருப்பதே இதற்கான காரணமாகும். எனினும், தொலைக்காட்டி தொழில்நுட்பத்தின் உதவியுடன், வெள்ளியை ஆய்வு செய்த விஞ்ஞானிகள், அது மிக உச்ச வெப்பநிலையைக்கொண்ட ஒரு கிரகமாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். அதன் மேற்பரப்பு வெப்பநிலை 464°C என அவர்கள் கூறுகின்றனர். இத்தகைய அதிக வெப்பநிலை காரணமாக, வெள்ளியின் மேற்பரப்பில் நீர் இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## சுழற்சி

வெள்ளி தனது சுழற்சி, சுற்றுகை செயற்பாட்டிலும் வேறுபட்ட தன்மையைக் கொண்டதாக விளங்குகின்றது. வெள்ளி தவிர எல்லாக் கோள்களும் எதிர்க்கடிகார சுழற்சி முறையில் சூரியனைச் சுற்றி வருகின்றன. வெள்ளிக்கிரகமானது சூரியனை ஒருமுறை சுற்றிவர 224 புவி நாட்களை எடுக்கின்றது. மிக மெதுவாக சுழலும் வெள்ளிக் கிரகமானது தனது அச்சில் தன்னைத்தானே சுற்றுவதற்கு 243 புவித் தினங்களை எடுக்கின்றது.

## எரிமலை

வெள்ளிக்கிரகத்தின் மற்றொரு அம்சம் அங்கு எரிமலைகள் நிறைந்து காணப்படுவதாகும். இந்த எரிமலைகளின் செயல்பாட்டின் காரணமாக, அதன் உட்பகுதி மெக்மாவாக வெளியே வருகின்றது.

அத்துடன், வெள்ளியில் அமைந்துள்ள மலைகளில் மிகப்பெரிய மலைத்தொடருக்கு 'மெக்வெல் மொன்டஸ்' என பெயரிட்டுள்ளனர். இது ஏறக்குறைய 800 கி.மீற்றர் நீளமானது எனக் கருதப்படுகின்றது.

## அனுப்பப்பட்ட ஆய்வுக்கலங்கள்

1962 இல் அமெரிக்காவின் 'மெரினர்' விண்கலம் வெள்ளிக்கிரகத்திற்கு அனுப்பப்பட்டது. அதன்பின், நாஸா நிறுவனம் மூலம் அனுப்பப்பட்ட 'பயனியர்' விண்கலம் மூலம் வெள்ளிக்கிரகம் ஆய்வு செய்யப் பட்டது. அதனையடுத்து, வெனரா 15 மற்றும் 16 ஆகிய விண்கலங்கள் வெள்ளிக்கிரகத்திற்குச் சென்று அங்குள்ள நிலைமைகள், நிகழ்வுகள், மேற்பரப்பில் ஏற்படும் மாற்றங்கள் என்பன குறித்து பல்வேறு தகவல்களை புவிக்கு அனுப்பின. எனினும், இவ்விரு விண்கலங்களும் அனுப்பிய தகவல்கள் ஒன்றுக்கொன்று முற்றாக முரண்பட்டவை என நாஸா நிறுவனம் தெரிவிக்கின்றது. இதன் காரணமாக, 'வெனரா' திட்டத்தின்கீழ் வெள்ளி குறித்த உறுதியான முடிவுகளுக்கு வர விஞ்ஞானிகளால் முடியாதுள்ளது.

வெள்ளியை நோக்கி அனுப்பப்பட்ட மகலன் விண்கலத்தில் அமைந்திருந்த தொலைக்காட்டி வெள்ளியின் மேற்பரப்பின் சுமார் 300,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள பிரதேசத்தைப் படம் பிடித்தது. 'மகலன்' விண்கலத்தின் மூலம் கிடைத்த தகவலின்படி; புவி மற்றும் சந்திரன் ஆகியவற்றின் தோற்றத்திற்குப் பின்பே வெள்ளி தோன்றியிருக்கக்கூடும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

1992 இல் வெள்ளியை நோக்கி அனுப்பப்பட்ட 'மகலன்' விண்கலமானது வெள்ளியின் மேற்பரப்பில் உள்ள அதிகமான பகுதிகளைப் படமாக்கியது. அத்துடன், வெள்ளிக்கிரகம் பற்றிய மிக முக்கியமான தரவுகளை புவிக்கு அனுப்புவதிலும் சாதனை புரிந்தது. இதன்படி இன்று உலகெங்கும் உள்ள வானவியலாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் தமது ஆய்வு நடவடிக்கைகளுக்காக 'மகலன்' விண்கலத்திலிருந்து அனுப்பப்பட்ட தகவல்களையே பயன்படுத்துகின்றனர்.

1962 இல் அமெரிக்காவால் வெள்ளிக்கிரகத்தை நோக்கி அனுப்பப்பட்ட 'மெரினர்-2' விண்கலமானது வெள்ளிக்கிரகத்திற்கு 20,000 மைல் தூரம் வரை அருகில் சென்று அதன் மேற்பரப்பின் வெப்பநிலை 464°C என்பதைக் கண்டறிந்தது. இந்த நிலையில் எத்தகைய உயிரினங்களும் அங்கு வாழக்கூடிய வாய்ப்பில்லை என்பது உறுதியாகின்றது. அது மாத்திரமன்றி, என்றாவது மனிதன் வெள்ளிக்கிரகத்தின்மீது தரையிறங்குவதற்கான சாத்தியமும் இல்லை என்பதும் உறுதியாகின்றது.

## வளிமண்டலம்


மிகவும் கனமான வெள்ளியின் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் நிறைந்து காணப்படுகின்றது. தவிர, சல்பியுரிக் அமிலமும் காணப்படுகின்றது. இக்கிரகத்தின் வளிமண்டலத்தில் பெருமளவு காபனீரொட்சைட் காணப்படுவதால், இயல்பாகவே வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுவதற்கு இது ஒரு காரணமாக அமைகின்றது.

பிரபஞ்சத்தில் அமைந்துள்ள கிரகங்களுக்கிடையில் மிகவும் வறண்ட கோளாகிய வெள்ளியானது புவிக்கு சமனான பல அம்சங்களைக் கொண்டுள்ள பொழுதிலும், அங்கு உயிரினங்கள் வாழ்வதற்குரிய வாய்ப்புகள் அறவே இல்லை என்பதே உண்மையாகும்.


மெரினர்-2 விண்கலம்




இரவு வானில் வெள்ளியின் தோற்றம்



வெள்ளியின் நிஜத்தோற்றம்


மகலன் விண்கலம்


வெள்ளியிலுள்ள எரிமலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரியான விடையைத் தெரிவுசெய்து எழுதுக 1

*(சீனா, இலங்கை, மெக்சிகோ)*

1. வண்ணத்துப்பூச்சிகள் சரணாலயம் உள்ள நாடு எது?

   ..............................................

2. 2008 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நாடு எது?

   ..............................................

3. யானைகள் சரணாலயம் அமைந்துள்ள நாடு எது?

   ..............................................

## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைக்க 2







தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.09.15 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 277**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## இறங்கு வரிசைப்படுத்துக 5


*1. 345, 87, 119, 2005, 63*

..............................................


*2. 26, 218.5, 94, 403, 218*

..............................................

## 'LI' எழுத்துக்களில் ஆரம்பமாகும் படத்தைக் குறிக்கும் சொல்லில் X அடையாளமிடுக 3




## A, B, C, D, E, F ஆகிய படங்களை இலக்கமிடப்பட்டுள்ள பகுதியில் இனங்கண்டு இணைக்க 4





## அறிவுக்கு விருந்து 274 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 02**



**போட்டி: 03**

(அ) 4 கூடைகளில் வட்டமிடுக
(ஆ) 7 கோழிக்குஞ்சுகளில் வட்டமிடுக
(இ) 3 முயல்களில் வட்டமிடுக
(ஈ) 5 பூச்சாடிகளில் வட்டமிடுக

**போட்டி: 04**

1. கிஸா
2. கிமோனா

**போட்டி: 05**

அவுஸ்திரேலியாவில் உள்ள மியாமி கடற்கரையில் ஏராளமான டொல்ஃபின்களைக் காணலாம்.டொல்ஃபின்கள் எழுப்புகின்ற விசில் ஊதுவது போன்ற ஒருவித ஒலியை செவிமடுப்பதானது, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு சிறந்த சிகிச்சை முறையாக இருப்பதாக ஆராய்ச்சியொன்றினூடாக தெரியவந்துள்ளது. இதனால், அத்தகைய குழந்தைகளை அழைத்துக்கொண்டு ஏராளமானவர்கள் இந்தக் கடற்கரைக்கு வருகின்றனர்.

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 274 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஸ்.கிருத்திரிகா,
55, தபால் கந்தோர் வீதி, மஸ்கெலியா.

**போட்டி: 02**
ஸனோ நஸ்ஹத், 56, பிரான்ஸ் சிற்றி, மருதமுனை.

**போட்டி: 03**
எஸ்.சஞ்ஜீவ், 5 ஆம் குறுக்கு, புத்தூர்.

**போட்டி: 04**
ஜி.காருண்யா, E55, குடாகம, ஹட்டன்.

**போட்டி: 05**
எம்.சஜ்ஜாத், 10/1B, குருகொட, அக்குறனை.

**பாராட்டுப் பெறுவோர்**

* எஸ்.தமிழ்இன்பன், கோண்டாவில்.
* ருஹைம் ஃபவ்மி, அம்பத்தன்ன.
* தி.ரேவதி, கரவெட்டி.
* ஏ.துரிஷா, கெட்டபுலா.
* எம்.ஷெஃபா, உக்குவளை.
* ந.அபிப்பிரியன், யாழ்ப்பாணம்.
* எம்.முஸ்தகீம், ஏறாவூர்-03.
* சி.துஜீத்திரன், மட்டக்களப்பு.
* எம்.ஸிஹான், பதுளை.
* எம்.மதுக்ஷன், மடுல்சீமை.

## விஜய் வாசகர் மடல்



'இறந்த பின்னரும் உடல் பாதுகாக்கப்படும் பிரபல தலைவர்கள்' என்ற கட்டுரை எனக்கும் எமது பாடசாலை மாணவர்களுக்கும் மிகவும் பயனளித்தது. 'அனோஃபிலிஸ் நுளம்பு' பற்றிய கட்டுரை சுற்றுச் சூழலைப் பாதுகாத்து, நோயின்றி வாழக் கற்றுத் தந்தது. 'விற்றமின் A குறைபாடு' குறித்த கட்டுரையும் சிறப்பானது.

**-இனாஸ் அஹ்மட், தரம்-11, அந்-நூர் மு.ம.வித்., தெனிபிடிய.**

விஜய்யில் வரும் அனைத்து விடயங்களும் சூப்பர். 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தொடர்ந்து உன்னை வாங்கி வருகிறேன். 'கண்ணை மூடினால் வருவது கனவு. விஜய்யில் மூழ்கினால் வருவது அறிவு' என்பது எனது கருத்தாகும்.

**-எம்.ஜெயகலா, தரம்-11B, கிரேக் த.ம.வித்., பண்டாரவளை.**

எமது விஞ்ஞானப் பாடப்புத்தகத்தில் மலேரியா நோய் தொடர்பாக உள்ளது. எனினும், அதில் மிகக் குறுகிய விளக்கமே தரப்பட்டுள்ளது. ஆனால், விஜய்யை வாசித்தபோது, மலேரியா நோய் தொடர்பான பல்வேறு விளக்கங்களையும் அது தொடர்பான சிறந்த, தெளிவான படங்களையும் பெற்றுக்கொண்டேன். விஜய்க்கு என் இதயம் கனிந்த நன்றிகள். **-என்.அய்மா, தரம்-10B, அல்-ஹம்றா வித்., மருதமுனை.**

'இறந்த பின்னரும் உடல் பாதுகாக்கப்படும் பிரபல தலைவர்கள்', 'பைசன்', 'அனோஃபிலிஸ் நுளம்பு', 'மாணவர் ஆக்கம்' பகுதி, 'உலகிலேயே மிகச்சிறிய கார்' என்பன மிகவும் சிறப்பானவை.




**-எஸ்.சிகான், தரம்-7D, அல்-அக்ஸா கல்., கிண்ணியா.**

'அனோஃபிலிஸ் நுளம்பு' பற்றிய அதிகமான தகவல்களை நீ தந்துள்ளாய். மேலும், 'டோகோ' என்றொரு நாடு இருப்பதை உன் மூலமாகவே அறிந்துகொண்டேன்.

**-எம்.ஆசிக், தரம்-11A, இந்து ம.கல்., புத்தளம்.**

உலகிலேயே சிறிய 'பீல் பீ50' கார், 'இராமாயணம்', 'விண்வெளித் தகவல்கள்'போன்ற ஆக்கங்கள் எனக்கு மிகவும் பயன்பட்டன. மேலும் கணினி பற்றிய விடயங்களைத் தொடர்ந்தும் பிரசுரிக்கும்படி வேண்டுகிறேன்.

**-த.ரிஷான், தரம்-8B, இந்துக் கல்., கொழும்பு-04.**

'விண்வெளித் தகவல்கள்', 'டைனமோவின் தந்தை', 'ஓவியக்கலை' போன்ற அம்சங்களினூடாக பாடரீதியான, அறிவியல் ரீதியான தகவல்களைத் தந்துதவிய உனக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**-க.துலக்சன், தரம்-9, த.ம.ம.வித்., வவுனியா.**

'ஒல்லாந்தர் வரலாறு', 'கல்வி முகாமைத்துவம்', 'புலமைப்பரிசில் வினாக்கள்', 'இறந்த பின்னரும் உயிர்வாழும் பிரபல தலைவர்கள்', 'விண்வெளித் தகவல்கள்' போன்ற ஆக்கங்களும் 'ஊசி மூக்குக் கொசுவும் முட்டாள் கரடியும்' தொடர்கதையும் என்னை மிகவும் கவர்ந்தவை. **-ஆ.புவனராஜ், தரம்-11B, பளை ம.கல்., பளை.**

'விஜய்'யில் வெளிவருகின்ற அனைத்து விடயங்களும் பயனுள்ளவையே. 'அற்லஸ் கேள்வி' போட்டியினூடாக வெற்றியையும் பாராட்டுக்களையும் பெற்று, மிகவும் உற்சாகமடைந்துள்ளேன்.

**தனுஷிகா குமாரி, இரஜவலை இ.தே.கல்., திகன.**

நான், 'விஜய்' பத்திரிகையின் ஆரம்பகால வாசகன். அதன் முதல் பிரதி தொடக்கம் இதுவரை வெளிவந்துள்ள சகல பிரதிகளையும் பெற்று-வாசித்து, தற்போது எனது பிள்ளைக்கும் அதன் பிரயோசனத்தைக் கிடைக்கச் செய்துகொண்டிருக்கின்றேன்.

**-எம்.அமானுல்லாஹ், முஸ்லிம் பாடசாலை வீதி, பெரிய நீலாவணை-02.**

**இந்த இதழில் (08.09.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15.09.2010.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**



**வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வரலாற்றில் சங்கிலி மன்னன்



வரலாற்றுத் தொடர்... 11

அரியாலையூர் சி.சிவதாசன்

கீழ்மகனான காக்கைவன்னியனின் உள்நோக்கம் புரியாத பரநிருபசிங்கனும் அவன் தாய்மாமனான அப்பாமுதலியும் யாழ்ப்பாண அரசினைத் தம்வசப்படுத்துவதற்காக அவனை மிக ரகசியமான ஓரிடத்தில் சந்தித்தனர். ''கொழும்புக் கோட்டையை அன்னியர்கள் கைப்பற்றிவிட்டனர். அடுத்துக் கண்டி அரசினை அவர்கள் கைப்பற்றுவார்கள். இப்படியே போனால் நிலைமை என்னவாகும்? எனவே, நாம் அவர்களை நண்பர்கள் ஆக்கி அவர்களுக்குரிய கப்பத்தை செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பும் கிறிஸ்தவ மதத்தை இங்கு பரப்புவதற்கும் வியாபாரத்தை தங்குதடையின்றிச் செய்வதற்கும் இடமளித்தால் அவர்கள் எமக்கு அளவில்லாத செல்வங்களை அளிப்பார்கள். எனவே, நீங்கள் அதற்கெல்லாம் சம்மதமென்றால் நான்



தன் அரசுக்கெதிராக, தன் அமைச்சர்கள் செயற்படுவதை அறியாத சங்கிலி... அரசினை நல்வழி நடத்தியதோடு, மந்திரி அப்பா முதலியின் மகளை நேசித்தும் வந்தான்

அவர்களைச் சந்திக்க வைத்து உங்களுக்குரிய நாட்டைப் பெற்றுத் தருவேன்'' என்று உள்ளத்தில் வஞ்சனையோடு காக்கைவன்னியன் கூறினான். காக்கைவன்னியனின் உள்நோக்கத்தை அறியாத அப்பாமுதலியும் பரநிருபசிங்கனும் அந்த வஞ்சகனின் திட்டத்திற்கு அடிபணிந்தார்கள்.

தன் அரசுக்கெதிராக தன் அமைச்சர்கள் செயற்படுவதை அறியாத சங்கிலி அரசினை நல்வழி நடத்தியதோடு, மந்திரி அப்பா முதலியின் மகளை நேசித்தும் வந்தான். சங்கிலி ஏற்கனவே மணம் முடித்தபோதும் அப்பா முதலியின் மகளை வரம்பு முறை மீறாமல் திருமணம் செய்ய ஆயத்தமாக இருந்தான். இந்நிகழ்வு பற்றி அப்பா முதலி அறிந்திருக்கவில்லை. அவன் தனது மருமகன் பரநிருபசிங்கனை மன்னனாக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

இவை நடந்து மறுதினம் சங்கிலி மன்னன் அத்தாணி மண்டபத்தில் இருக்கையில் காவலாளி ஒருவன் ஓடி வந்தான். ''மன்னா! ஆபத்து... நெடுந்தீவு அதிகாரி ஒருவர் தங்களைப் பார்க்க வேண்டுமாம்'' என மன்னனைப் பணிந்து கூறினான். ''உடனே அவரை வரச்சொல்'' எனக் கூறிய சங்கிலி மன்னன் அந்த நெடுந்தீவு அதிகாரியைக் காண ஆயத்தமானான். நெடுந்தீவு அதிகாரி மன்னனைப் பணிந்து, ''முடிவேந்தே எங்கள் கடல் எல்லையில் பறங்கிப் படைகள் அத்துமீறி இறங்கி ஊருக்குள் புகுந்து மந்தைகளைக் கடத்தியும் பெண்களை இம்சைப்படுத்தியும் தொந்தரவு செய்கிறார்கள். அதனால்,

**நெடுந்தீவு அதிகாரி மன்னனைப் பணிந்து, ''முடிவேந்தே எங்கள் கடல் எல்லையில் பறங்கிப் படைகள் அத்துமீறி இறங்கி ஊருக்குள் புகுந்து மந்தைகளைக் கடத்தியும் பெண்களை இம்சைப்படுத்தியும் தொந்தரவு செய்கிறார்கள். அதனால், மக்கள் அச்சத்தோடு வாழ்கிறார்கள். என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ? என மக்கள் ஏங்குகிறார்கள்'' எனக் கூறினான்**

## பறங்கியரின் அட்டகாசம்


மக்கள் அச்சத்தோடு வாழ்கிறார்கள். என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ? என மக்கள் ஏங்குகிறார்கள்'' எனக் கூறினான்.

''அப்படியா! அவர்கள் யாருடைய உத்தரவின்பேரில் மந்தைகளைக் கடத்துகிறார்கள். இப்பொழுதே காக்கைவன்னியனுக்கு ஓலை எழுதுகிறேன். ஆட்சியில் தப்பிதங்கள் செய்யும் அந்தப் பறங்கியருக்குத் தக்கபாடம் புகட்டுகிறேன். யாரங்கே? உடனே செல்லுங்கள்... யாழ்ப்பாணக் கரைகளில் கப்பலோட்டும் யாராக இருந்தாலும் வரிசெலுத்த நான் உத்தரவிட்டதாகக் கூறுங்கள். வரி செலுத்தத் தவறினால் பெரும் விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வருமென்றும் கடுமையாக எச்சரியுங்கள். அதற்கும் சம்மதிக்காது போனால் அவர்களைச் சிறைப்பிடித்து வாருங்கள்'' இவ்வாறு கூறி சங்கிலி மிக ஏளனமாகச் சிரித்தான். அஞ்சாநெஞ்சம் கொண்ட சங்கிலிக்கு மேலும் பெரும் சவால் காத்திருந்தது.

நெடுந்தீவு அதிகாரியும் தூதுவர்களும் வெளியேறியதும் அங்கே மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் வந்தார். ''மாமன்னரே! கடந்த சில மாதங்களாக எமது மண்ணில் பறங்கிப் பாதகர்களின் மரக்கலங்கள் தங்குகின்றன. அவர்களிடம் வரி கேட்டு நாம் சென்றால் தர மறுக்கிறார்கள். எமது மண்ணின் செல்வங்களை பகற்கொள்ளையும் அடித்துச் செல்கின்றார்கள். இந்த வேதனையான செய்தியைத் தங்கள் சமூகத்தில் சொல்லவே நான் இங்கு வந்தேன்'' என்றார் அந்த அதிகாரி.

(தொடரும்...)

# லண்டன் சுருளும் பாலம்



*லண்டனில் படிங்டன்பேசின் என்னும் இடத்தில் சுருளும் பாலம் ஒன்று இயங்கி வருகிறது. 2004 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இப்பாலத்தை வடிவமைத்தவர் பிரிட்டிஷ் கட்டட வடிவமைப்பாளர் தோமஸ் ஹிதர்விக் என்பவராவார். இந்த 12 மீற்றர் நடைபாலம் ஒரு கால்வாய்க்குமேல் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப்பாலம் தேவையானபோது ஒரு சக்கரம் போல சுருண்டு கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. சுருண்டு கொள்ளும் வேளையில் கால்வாய் வழியாக படகுகள் செல்லும் வாய்ப்பு ஏற்படுகிறது.*

*ஒரு பொத்தானைத் தட்டினால் பாலம் சுருண்டு பாலத்தின் இரண்டு நுனிப்பகுதிகளும் நெருங்கிக் கொள்கின்றன. இந்தப் புதுமையான வடிவமைப்புக்கு 2005 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் சிறந்த அமைப்புக்கான விருது கிடைத்தது. இந்தப் பாலம் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை நண்பகல் சுருண்டு கொள்கிறது.*

# உலகின் முதலாவது நாவலாசிரியை



ஜப்பானிய எழுத்தாளரான லேடி முரசாக்கி ஷிக்கிபு (Lady Murasaki Shikibu) என்பவரே உலகின் முதலாவது நாவலாசிரியையாகக் கருதப்படுகிறார். 10 ஆம், 11 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அநேக பெண்களைப் போல் அல்லாமல் இவர் ஆண்களுக்குச் சமமாக கல்வியில் சிறப்புப் பெற்றிருந்தார். 973 ஆம் ஆண்டு பிறந்த முரசாக்கி இளமையிலேயே துடிப்பும் திடகாத்திரமும் மிக்க பெண்ணாக விளங்கினார். வளர்ந்து பெரியவளானதும் தனது சிறுபராய வாழ்க்கை பற்றி தினக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

முரசாக்கியின் சரியான பெயர் என்னவென்று தெரியவில்லை. இவர் எழுதிய நாவலான கென்ஜி மொனொகட்டாரி, (கென்ஜியின் கதை) Genji monogatari நாவலின் கதாநாயகியின் பெயரே இவரின் பெயராகவும் நாவலாசிரியரின் பெயராகவும் குறிப்பிடப்படுகிறது.

இவர் எழுதிய நாவல் ஜப்பானிய இலக்கியத்தின் ஒரு சிறப்பு அம்சமாகவும் உலகின் முதலாவது நாவலாகவும் மனோதத்துவ நூலாகவும் பல சிறப்புக்களைப் பெறுகிறது.





*முரசாக்கி ஷிக்கிபுவை கௌரவிக்கும் வகையில் வெளியிடப்பட்ட 2000 யென் நாணயத்தாள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹார்ட் ட்ரைவ்களில் தரவுகளை அழித்தாலும்

## பிறர் அதனை அறியும் வாய்ப்பு...!



பாவனைக்கு உதவாத கணினிகளை எறியும்போதோ அல்லது அப்புறப்படுத்தும்போதோ 'ஹார்ட் ட்ரைவ்'களை கண்டபடி வீசிவிடுவதால் பாவனையாளர்களின் ரகசியங்கள் பல வெளியாரின் கைகளுக்குக் கிட்டி விடுவதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. பிபிஸி செய்திச்சேவையினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின் மூலமாகவே இந்த உண்மை தெரியவந்துள்ளது.

பிரிட்டனிலிருந்து நைஜீரியாவிற்கு அனுப்பப்பட்ட, பாவிக்கப்பட்டு பாவனைக்கு உதவாதது என்று ஒதுக்கப்பட்ட, 17 ஹார்ட் டிஸ்க்குகளை விலை கொடுத்து பெற்றுக்கொண்ட பிபிஸி செய்திப்பிரிவினர் குறித்த ஹார்ட் டிஸ்க்குகளில் காணப்பட்ட விடயங்களை பல்வேறு வகையிலான தொழில்நுட்ப நுணுக்கங்களின்மூலம் பெற்றுக்கொண்டனர். அவ்வாறு பெறப்பட்ட விடயங்களில் குறித்த கணினிகளைப் பாவித்தவர்களின் முகவரி, வங்கிக் கணக்கு, பாஸ்வேர்ட் (சங்கேத மொழி), டிஜிட்டல் படங்கள் ஈமெயில் முகவரிகள் உட்பட மிகவும் ரகசியமான வர்த்தகத் தொடர்புகளைக்கொண்ட விபரங்களையும் அறிய முடிந்தது.

இவ்வாறு பெறப்பட்ட தகவல்களின்படி, கண்டறியப்பட்ட நைஜிரியாவைச் சேர்ந்த டெட் ரொபர்ட்ஸ் என்ற நபருடன் பிபிஸி சேவையினர் தொடர்பு கொண்டனர். அவரிடம் அந்த ஹார்ட் டிஸ்க் விபரங்களைக் காட்டினர். அவரது ரகசியமான தகவல்கள் அனைத்தையும் கூறினர். அவர் ஆச்சரியப்பட்டுப்போனார். தான் இந்த ஹார்ட் டிஸ்க்கிலுள்ள 'ஃபைல்ஸ்' அனைத்தையும் அழித்தபின்னரே கழிவுகளை மீள்சுழற்சி செய்யும் நிறுவனமொன்றிற்கு வழங்கியதாக கூறினார்.

ஆக..... அவரது கருத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் ஒரு விடயத்தை பிபிஸியினர் புரிந்துகொண்டனர். அதாவது, அநேகமானவர்கள் தமது கணினியையோ ஹார்ட் டிஸ்க்கையோ அப்புறப்படுத்தும்போது அதிலுள்ள ஃபைல்ஸ்களை மட்டுமே அழித்துவிடுகின்றனர். அத்தோடு, நின்றுவிடாமல் அதிலுள்ள தமது அந்தரங்கமான ரகசியமான தகவல்களை அழித்துவிட வேண்டும் என்பதை அநேகர் அறிந்திருப்பதில்லை.

இன்னும் சிலர் இலவசமாகக் கிடைக்கின்ற மென்பொருட்களைக்கொண்டு 'ஹார்ட் டிஸ்க்'கிலுள்ள ஃபைல்ஸ்களை அழிப்பதுண்டு. ஆனால், முழுமையாக அவற்றை அழிப்பதில்லை. சில ஃபைல்ஸ்கள் தாமாகவே அழிபடாமல் ஒளிந்து விடுவதுமுண்டு.

அநேகமானவர்கள் ஹார்ட் டிஸ்க்கை முழுமையாக ஃபோமெட் (Format) செய்து, மீண்டும் இன்ஸ்டோல் செய்வதன் மூலமும் அனைத்து விபரங்களையும் ஹார்ட் டிஸ்க்கிலிருந்து அழித்து விட்டதாக எண்ணுகின்றனர். ஆனால், இதனையும்கூட உறுதியாகக் கூறமுடியாது. ஏனென்றால், சிலர் பலவிதமான ரகசிய நுணுக்கமான உபாயங்களின் மூலம் தமது ஃபைல்ஸ்களை சேர்வ் செய்து வைத்திருப்பதுண்டு. இப்படியானவை தொடர்ந்தும் டிஸ்க்குகளினுள் நீங்காமல் இருக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

இவற்றை வெளியார் ஒருவர் Recovery Softwares எனப்படும் விசேட மென்பொருட்களை பாவித்துப் பெற்றுக்கொள்ள முடியும். சரி.... இவ்வாறான பிரச்சினைகள் இருப்பதால், ஹார்ட் டிஸ்க்கிலுள்ள தகவல்களை வெளி நபர்கள் அறியமுடியாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம்? இதற்கு 'விச்' என்ற கணினிச் சஞ்சிகை வழியொன்றைக் கூறுகின்றது.

அதாவது, கழிவுகளாக அப்புறப்படுத்தப்படுகின்ற ஹார்ட் டிஸ்க்கை கழற்றி அதில் மின் துளைக் கருவியின் மூலம் இரண்டு மூன்று ஓட்டைகளைப் போட்டுவிடுமாறு குறிப்பிடுகின்றது. இவ்வாறு செய்தால் அந்த ஹார்ட் டிஸ்கை இன்னொருவரால் இயக்க முடியாது. இதன்மூலம் ஒருவரின் ரகசிய தகவல்களை இன்னொருவர் அறியும் வாய்ப்புத் தடுக்கப்படும். அப்படியும் இல்லாவிட்டால் ஹார்ட் டிஸ்க்கை சுத்தியல் ஒன்றினால் நன்றாக அடித்து நெளித்து விடவேண்டியதுதான். அப்போது அதனை இன்னொருவரால் இயக்கும் நிலை தடுக்கப்படும்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, செப்டெம்பர் மாதம் 08 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd, No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 08, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org